பக்கங்கள் 25+5

மாலை முரசு
கனடா முரசு இணைப்பு

முழக்கம்: 01 வள்ளுவ ஆண்டு 2054 மாசி 09 புதன்கிழமை 21.02.2024 அதிர்வு 205


## மோ. சைக்கிள் விபத்தில் பல்கலை மாணவன் பலி

### யாழ்ப்பாணத்தில் சோகம்



(எஸ்.நிதர்ஷன்)
யாழ்ப்பாணம் பல்கலைக்கழக மாணவன் ஒருவர் விபத்தில் சிக்கி உயிரிழந்துள்ளார்.

04




# இலங்கை - இந்தியா இடையே

# இராஜதந்திர உறவில் பாதிப்பு

## கச்சதீவு உற்சவத்தைப் புறக்கணித்தனர் தமிழக யாத்திரிகர்கள்

## இராமேஸ்வரம் - வேர்க்கோடு பங்குத்தந்தை எழுத்தில் அறிவிப்பு

(ந.லோகதயாளன்)

இந்திய மீனவர்களை விடுவிக்காத நிலையில் இந்திய யாத்திரிகர்கள் எவரும் கச்சதீவு செல்லவில்லை என்று இராமேஸ்வரம் - வேர்க்கோடு பங்குத்தந்தை சந்தியாகு எழுத்தில் அறிவித்துள்ளார்.

இலங்கைக் கடற்பரப்புக்குள் எல்லை தாண்டி மீன்பிடியில் ஈடுபட்ட வேளை கைது செய்யப்பட்ட தமிழக மீனவர்களில் நால்வருக்குச் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு சிறைத் தண்டனை விதிக்கப்பட்டுள்ள நால்வரையும் விடுவிக்கக் கோரி இராமேஸ்வரம் மீனவர்கள் தொடர் போராட்டத்தில் ஈடுபட்டு வருவதோடு கச்சதீவு உற்சவத்தையும் புறக்கணிப்பதாகவும் அறிவித்திருந்தனர்.

04



## துப்பாக்கிச்சூட்டில் குடும்பஸ்தர் சாவு!

ராகம பகுதியில் இன்று காலை இடம்பெற்ற துப்பாக்கிச்சூட்டுச் சம்பவத்தில் ஒருவர் உயிரிழந்துள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

ராகம, எலப்பிட்டிவல சந்தியில் உள்ள இறைச்சிக் கடையொன்றுக்கு அருகிலேயே காலை 7.15 மணியளவில் மோட்டார் சைக்கிளில் வந்த இனந்தெரியாத

04

### கொழும்பு பல்கலைக்கழகத்தின்

## பெண் விரிவுரையாளர் கோர விபத்தில் பலி!

கொழும்பு பல்கலைக் கழகத்தின் கலைப்பீடத்தின் உதவி விரிவுரையாளரான 27 வயதான யுவதி லொறி மோதி உயிரிழந்துள்ளார்.

பத்தரமுல்லை, விக்கிரமசிங்கபுர சந்தியில் பாதசாரி கடவைக்கு அருகில் வீதியைக் கடக்கும்போது அவர் மீது லொறி மோதியுள்ளது.

பத்தரமுல்லை, விக்கிரமசிங்கபுர, 10ஆவது லேனில் வசித்து வந்த லக்மினி போகமுவ என்ற 27 வயதுடைய



விரிவுரையாளரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

அவர் நேற்று விக்கிரம சிங்கபுரவிலிருந்து

04



# மன்னாரில் 2 பேர் சுட்டுக்கொலை: சந்தேகநபர்கள் இருவர் சிக்கினர்!

**(மன்னார் நிருபர்)**

மன்னார் – அடம்பன், முள்ளிக்கண்டல் பகுதியில் இருவர் சுட்டுக்கொலை செய்யப்பட்ட சம்பவம் தொடர்பில் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

உயிலங்குளம் மற்றும் மன்னார் பகுதிகளைச் சேர்ந்த 33 மற்றும் 55 வயதையுடைய மேற்படி இருவரும் நேற்று மாலை கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கடந்த ஆண்டு ஆகஸ்ட் 24 ஆம் திகதி இந்த இரட்டைக் கொலைச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

வயலுக்கு தண்ணீர் பாய்ச்சுவதற்காக மோட்டார் சைக்கிளில் பயணித்துக் கொண்டிருந்தவர்கள் மீது துப்பாக்கிப் பிரயோகம் நடத்தப்பட்டிருந்தது.

துப்பாக்கிச்சூட்டில் மன்னார், நொச்சிக்குளம் பகுதியைச் சேர்ந்த ஜேசுதாசன் அருந்தவராஜா (வயது 42) மற்றும் மாந்தை மேற்கு பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள ஈச்சளவக்கை கிராமத்தைச் சேர்ந்த கணபதி காளிமுத்து (வயது 56) ஆகியோரே உயிரிழந்தனர்.

கைது செய்யப்பட்ட சந்தேகநபர்கள் அடம்பன் பொலிஸ் நிலையத்தில் தடுத்துவைக்கப்பட்டு விசாரணைகளுக்கு உட்படுத்தப்பட்டு வருகின்றனர்.

# யாழ். சிறையில் இருந்த 3 இந்திய மீனவர்களும் வெலிக்கடைச் சிறைக்கு

**(ந.லோகதயாளன்)**

யாழ்ப்பாணம் சிறைச்சாலையில் இருந்த 3 இந்திய மீனவர்களும் வெலிக்கடைச் சிறைச்சாலைக்கு இடமாற்றப்பட்டனர்.

இலங்கைக் கடற்பரப்புக்குள் எல்லை தாண்டி மீன்பிடியில் ஈடுபட்ட வேளை கைது செய்யப்பட்டு 6 மாத சிறைத் தண்டனை விதிக்கப்பட்ட இரு படகோட்டிகள் மற்றும் கடந்த ஆண்டு கைது செய்யப்பட்டு ஒத்திவைக்கப்பட்ட சிறைத் தண்டனையுடன் விடுவிக்கப்பட்டு மீண்டும் இலங்கைக் கடற்பரப்புக்குள் நுழைந்த குற்றச்சாட்டில் ஓர் ஆண்டு சிறைத் தண்டனை விதிக்கப்பட்ட ஒருவர் என மூவர் யாழ்ப்பாணம் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருந்தனர்.

ஆறு மாதங்களுக்கு மேற்பட்ட தண்டனை விதிக்கப்பட்ட கைதிகள் என்ற அடிப்படையில் இந்த 3 கைதிகளும் தற்போது வெலிக்கடைச் சிறைச்சாலைக்கு இடமாற்றப்பட்டுள்ளனர்.



# வாள்வெட்டுக் கும்பலால் மோ. சைக்கிள் தீக்கிரை!

**(எஸ்.நிதர்ஷன்)**

யாழ்ப்பாணம் – காரைநகர் பகுதியில் வாள்வெட்டு வன்முறைக் கும்பலால் மோட்டார் சைக்கிள் ஒன்று தீக்கிரையாக்கப்பட்டுள்ளது.

காரைநகர், ஆலடிப் பகுதியில் நேற்று இரவு இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

வன்முறைக் கும்பல் தப்பிச் சென்றுள்ள நிலையில் சம்பவம் தொடர்பாக பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.




# யாழ். பல்கலையில் தொழிற் சந்தை நிகழ்வு

(பிரபாகரன் டிலக்சன்)

யாழ்ப்பாணம் பல்கலைக்கழக முகாமைத்துவக் கற்கைகள் மற்றும் வணிக பீடத்தின் தொழிற் சந்தை நிகழ்வு இன்று காலை 9 மணியளவில் முகாமைத்துவக் கற்கைகள் மற்றும் வணிக பீட வளாகத்தில் திறந்துவைக்கப்பட்டது.

பல்கலைக்கழக மாணவர்களின் தொழில்வாய்ப்புகளை அதிகரிக்கும் முகமாக யாழ். பல்கலைக்கழகத் தொழிற்றுறைத் தொடர்பு மையம் மற்றும் தொழில் வழிகாட்டல் அலகு ஆகியவை இணைந்து நடத்தும் இந்தத் தொழில் வாய்ப்பு சந்தை ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இந்தத் தொழில் வாய்ப்புச் சந்தையில் கணக்கியல், நிதியியல், மனித வள, சந்தைப்படுத்தல், வணிகத் தொழில்நுட்பம், தொடர்பாடல் மற்றும் ஆடை உற்பத்திகளில் ஈடுபடும் சுமார் 43 தொழில் வழங்குநர்கள் கலந்து கொண்டனர்.

இதன்மூலம் சுமார் 800 இற்கும் மேற்பட்ட மாணவர்கள் கலந்துகொண்டு தமது தொழில் வாய்ப்புகள் பற்றிய அறிவைப் பெற்றுக்கொள்வார்கள் என ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர்.










# யாழ். பல்கலைக்கழகத்தில் இன்று சர்வதேச தாய்மொழித் தின நிகழ்வு





(பிரபாகரன் டிலக்சன்)


யாழ்ப்பாணம் பல்கலைக்கழக மொழியியல் ஆங்கிலத் துறையின் ஏற்பாட்டில் சர்வதேச தாய்மொழித் தினம் நிகழ்வுகள் இன்று நடைபெற்றன.

யாழ். பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் காலை 9.30 மணியளவில் மொழியியல் ஆங்கிலத் துறை தலைவர் கவிதா நவகுலன் தலைமையில் இந்த நிகழ்வுகள் ஆரம்பமாகின.

இதன்போது, "தாய்மொழி பற்றிய கருத்தியல்" எனும் தலைப்பில் சிக்காக்கோ பல்கலைக்கழகப் பேராசிரியர் இ.அண்ணாமலை நிகழ்நிலையில் உரையாற்றினார்.

நிகழ்வில் கலைப்பீட பீடாதிபதி பேராசிரியர் சி.ரகுராம், இந்தியத் துணைத் தூதுவர் ராகேஷ் நட்ராஜ் ஜெயபாஸ்கரன், விரிவுரையாளர்கள், மாணவர்கள் உட்படப் பலர் கலந்து கொண்டனர்.

# மன்னாருக்குக் கடத்தி வரப்பட்ட 650 ஜெலற்றீன் குச்சிகள் சிக்கின



(ந.லோகதயாளன்)

கொழும்பில் இருந்து மன்னாருக்குக் கடத்தி வரப்பட்ட 650 ஜெலற்றீன் குச்சிகள் கடற்படையினரால் கைப்பற்றப் பட்டுள்ளன.

மன்னார் கடலில் சட்டவிரோத டைனமற் தொழில் முறைமைக்குப் பயன்படுத்தும் நோக்கில் எடுத்து வந்த தாகச் சந்தேகத்தின் பெயரிலேயே கடற்படையினரால் நேற்று இரவு இவை கைப்பற்றப்பட்டுள்ளன.

இந்த ஜெலற்றீன் குச்சிகளைக் கடத்தி வந்த சந்தேகநபர் ஒருவரும் கைது செய்யப்பட்டுள்ளார்.

## முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

### பெண் விரிவுரையாளர்...

வேலைக்குச் செல்வதற்காக பாதசாரி கடவைக்கு அருகில் வீதியின் மறுபுறம் சென்றபோது பத்தரமுல்ல – பெலவத்தையிலிருந்து தலவத்துகொட நோக்கிச் சென்ற லொறியின் முன்பகுதி மோதியுள்ளது.

2017ஆம் ஆண்டு கொழும்பு பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற பட்டமளிப்பு விழாவில் இரண்டு பதக்கங்களையும் புலமைப்பரிசில்களையும் பெற்று சிறந்த மாணவியாக அவர் தெரிவானார்.

நடனம், பாடுதல் மற்றும் இசைக் கருவிகளை வாசிப்பதில் அவர் திறமையானவர்.

கொழும்பு பல்கலைக்கழகம், பத்தரமுல்ல கலைப்பீடத்தின் சர்வதேச உறவுகள் பிரிவில் உதவி விரிவுரையாளராகக் கடமையாற்றிய அவர், களனி பல்கலைக்கழக சிரேஷ்ட விரிவுரையாளர் சந்திரசிறி போகமுவவின் ஒரே யொரு பிள்ளையாவார்.

### மோ. சைக்கிள்...

யாழ். பல்கலைக்கழக கலைப்பீட முதலாம் வருட மாணவனான மானிப்பாய் பகுதியை சேர்ந்த 22 வயதான ரமேஷ் சகீந்தன் எனும் மாணவனே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

மேற்படி மாணவன் யாழில் உள்ள பிரபல உதைப்பந்தாட்ட கழகங்களில் ஒன்றான ஊரெழு றோயல் கழகத்தின் பிரபல வீரருமாவார்.

நீர்வேலி சந்தைக்கு மானிப்பாயில் உள்ள தனது வீட்டில் இருந்து இன்று காலை மோட்டார் சைக்கிளில் பயணித்த போது, நீர்வேலியை அண்மித்த பகுதியில் வீதியின் குறுக்கே ஓடிய நாய் ஒன்றுடன் மோதி விபத்துக்குள்ளாகியுள்ளனர்.

விபத்தில் படுகாயமடைந்த மாணவனை மீட்டு யாழ். போதனா வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லும் வழியில் உயிரிழந்துள்ளார்.

சம்பவம் தொடர்பில் கோப்பாய் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

### இலங்கை - இந்தியா

மீனவர்களின் போராட்டத்துக்கு ஆதரவாக, இந்தியாவில் இருந்து கச்சதீவுக்கு வரும் யாத்திரிகர்களை ஒழுங்கமைக்கும் பங்குத் தந்தையான சந்தியாகு இம்முறை இந்திய யாத்திரிகர்கள் கச்சதீவுக்குச் செல்லவில்லை என்று இராமநாதபுரம் மாவட்ட ஆட்சித் தலைவருக்கு இன்று எழுத்தில் கடிதம் வழங்கியுள்ளார்.

இதன் காரணமாக இலங்கை – இந்தியா இடையே இராஜதந்திர உறவில் பாதிப்பு நிலை ஏற்பட்டுள்ளது என்று சுட்டிக்காட்டப்படுகின்றது.

### துப்பாக்கிச் சூட்டில்...

இருவர் துப்பாக்கிச்சூட்டை நடத்தியுள்ளனர் என்றும் பொலிஸார் கூறினர்.

உயிரிழந்தவர் 39 வயதுடைய ஹெட்டி ஆராச்சிகே டொன் சுஜித் என அடையாளம் காணப்பட்டுள்ளார்.

குடும்பஸ்தரான மேற்படி நபர் ஒழுங்கமைக்கப்பட்ட குற்றவாளியான வெல்லே சாரங்கவின் உறவினர் என்று தெரிவிக்கப்படுகின்றது.

அவர் கந்தானை பகுதியில் வசிக்கின்றார் என்றும், குறித்த இறைச்சிக் கடையின் உரிமையாளர் என்றும் பொலிஸ் விசாரணையில் தெரியவந்துள்ளது.

துப்பாக்கிச்சூடு நடத்தப்பட்டதற்கான காரணம் இதுவரை வெளியாகவில்லை என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.

சம்பவம் தொடர்பில் ராகம பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# மனோவின் பிள்ளையார் சுழி கதையை கேட்டால் பிள்ளையாரே அழுது விடுவார்

## சபையில் ஜீவன் கிண்டல்




“தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவர் மனோ கணேசன் இந்த 10 ஆயிரம் வீட்டுத் திட்டத்திற்கு நான்தான் பிள்ளையார் சுழி போட்டேன் என ஒரு அறிக்கை விட்டிருந்தார். இதனைப் பிள்ளையார் கேட்டால் அவரே அழுவார். பெயர் போடும் அரசியல் செய்ய நான் வரவில்லை. நிரந்தரத் தீர்வுகளைப் பெறவே நான் அரசியலுக்கு வந்தேன்.”

– இவ்வாறு இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் பொதுச்செயலாளரும் அமைச்சருமான ஜீவன் தொண்டமான் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற பிணைப் பொறுப்பளிக்கப்பட்ட கொடுக்கல் – வாங்கல்கள் சட்டமூலம், நம்பிக்கை பொறுப்பு பற்றுச்சீட்டுகள் (திருத்தச்) சட்டமூலம் உள்ளிட்ட 9 சட்டமூலங்கள் மீதான இரண்டாம் மதிப்பீடு மீதான விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் அங்கு தொடர்ந்து உரையாற்றும்போது,

“இந்திய அரசு மூலம் எமக்கு கிடைத்த வீட்டுத் திட்டத்தை கடந்த 19 ஆம் திகதி நம் அமுல்படுத்தினோம். 43 வீட்டுத் திட்டங்களில் 1300 வீடுகளை அறிமுகப்படுத்தினோம். இது 10 ஆயிரம் வீட்டுத்திட்டத்தில் முதல் கட்டம். இந்தத் திட்டம் தொடர்பில் பல்வேறு கருத்துக்கள் முன்வைக்கப்பட்டன. அதில் நாம் கட்சி பார்த்து வீடு கொடுப்பதாக சிலர் கூறியிருந்தார்கள். ஆனால், நாங்கள் இன்னும் பயனாளிகள் பட்டியலையே .அறிவிக்கவில்லை. அறிவிக்காத பட்டியலுக்கு எப்படி கட்சி பார்த்து வீடு கொடுக்க முடியும்?

எந்த அரசில் கட்சி பார்த்து யார் யாருக்கு வீடுகள் கொடுக்கப்பட்டன என்பது இங்குள்ள அரசியல்வாதிகளுக்கும் மக்களுக்கும் நன்றாகவே தெரியும். இங்கு அமர்ந்திருக்கும் வேலுகுமார் எம்.பிக்கும் நன்கு தெரியும். இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் உறுப்பினர்களுக்கு வீடு கொடுக்குமாறு நான் கேட்கவில்லை. 2012 – 2019 இல் புறக்கணிக்கப்பட்ட மக்களுக்கு வீடு கொடுங்கள் என்றுதான் கூறினேன். எனது கட்சிக்காரர்களுக்கு கொடுங்கள் என்று கூறும் புத்தி எனக்கு கிடையாது.

பயனாளிகள் பட்டியலில் தோட்டத்திலுள்ள சேவையாளர்களுக்கு வீடு கொடுக்க வேண்டும் என்று பெருந்தோட்டத்தொழில் அமைச்சராக இருந்த ரமேஷ் பத்திரவினால் முன்வைக்கப்பட்ட கோரிக்கைக்கு அமைய அவர்களையும் நாம் உள்ளடக்கியுள்ளோம்.

அதுமட்டுமன்றி அங்கேயே படித்துச் சேவை செய்யும் ஆசிரியர்களுக்கு வீடு வழங்கக் கோரியுள்ளோம். மலையகக் கலைஞர்களுக்கும் வீடு கேட்டுள்ளோம். அடுத்ததாக தோட்டத்தில் வேலை செய்தால் வீடு கிடையாது. தோட்டத்தில் பிறந்திருந்தால்தான் வீடு என்ற கொள்கையை உருவாக்கினோம். 2 இலட்சத்து 51 ஆயிரம் குடும்பங்கள் தோட்டத்தில் வாழ்கின்றன.

இதில் ஒரு இலட்சத்து 76 ஆயிரம் குடும்பங்களுக்கு வீட்டுப் பிரச்சினைகள் உள்ளன. இவ்வாறான நிலையில் தோட்டத்தில் வேலை செய்வது ஒரு இலட்சத்து 15 ஆயிரம் நபர்கள் மட்டும்தான். இன்று (நேற்று) வலப்பனையில் கூட தங்களுக்கு வீடு கிடைக்கவில்லையென ஒரு போராட்டம் நடந்தது. இந்திய அரசால் கிடைத்துள்ள வீடுகளின் எண்ணிக்கை 14 ஆயிரம். அவற்றை முறையில் நாம் பகிர்ந்தளிக்க வேண்டும். ஒரு இலட்சத்து 76 ஆயிரம் குடும்பங்களின் வீட்டுப் பிரச்சினையை இந்த 14 ஆயிரம் வீடுகள் தீர்க்கப்போவதில்லை.

இந்நிலையில் தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவர் மனோ கணேசன், ”இந்த 10 ஆயிரம் வீட்டுத் திட்டத்துக்கு நான்தான் பிள்ளையார் சுழி போட்டேன்”என ஒரு அறிக்கை விட்டிருந்தார். இதனைப் பிள்ளையார் கேட்டால் அவரே அழுவார். பெயர் போடும் அரசியல் செய்ய நான் வரவில்லை. நிரந்தரத் தீர்வுகளைப் பெறவே நான் அரசியலுக்கு வந்தேன்.

பதவி ஆசைக்கு வரும் புத்தியும் எனக்குக் கிடையாது 10 ஆயிரம் வீடுகளையும் நீங்களா கொண்டு வந்தீர்கள். சரி வைத்துக்கொள்ளுங்கள். அதே மாதிரி மலையக மக்களுக்கு பிரஜாவுரிமையை நீங்களா பெற்றுக் கொடுத்தீர்கள் சரி கொடுத்துக்கொள்ளுங்கள். நாளைக்கு ரணில் விக்கிரமசிங்கவை ஜனாதிபதியாக்கியதும் நான்தான் என்று கூறுவீர்கள். அதில் ஓரளவு உண்மையும் இருக்கலாம்.

நான் அனைவரும் ஒன்றிணைந்து கட்சி பேதமின்றி வேலை செய்வோம் என்றுதான் கூறுகின்றேன். 57 சதவீதமான மலையக மக்கள் தற்போது வறுமைக் கோட்டுக்கு கீழே இருக்கின்றார்கள். ஆனால், இங்குள்ள 10 மலையக எம்.பி.க்கள் உள்ளுக்குள் சண்டை போட்டுக்கொண்டிருக்கின்றோம்.வெளியே வந்த பின்னர் கை குலுக்குகின்றோம். என்ன நியாயம் இது?

இன்று (இன்று) நுவரெலியாவிலும் மலையகத்தமிழர் என்ற அடையாளத்தை வழங்கக் கோரி ஒரு போராட்டம் நடந்தது. எமது அடையாளம் இந்திய வம்சாவளித் தமிழர் என்று இருப்பது எமக்கு கடந்த காலங்களில் இடம்பெற்ற அநீதிகளை அங்கீகரிக்கும் ஒரு அடையாளம் என்பது எனது நிலைப்பாடு.

ஆனால், மக்கள் சொல்வதையும் நான் கேட்க வேண்டும் என்பதும் எனது நிலைப்பாடு. எனவே, சிவில் அமைப்புக்கள் மலையகப் பிரதிநிதிகள் எல்லோரும் ஒன்றிணைந்து கலந்துரையாடி தனி அடையாளக் கோரிக்கையை ஒற்றுமையாக ஜனாதிபதியிடம் முன்வைப்போம்.” – என்றார்.

# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்



259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## உயர்நீதிமன்றத்தின் பரிந்துரை

அரசு சமர்ப்பித்துள்ள பயங்கரவாத எதிர்ப்புச் சட்டமூலம் தொடர்பில் உயர் நீதிமன்றம் தனது பரிந்துரைகளை வெளிப்படுத்தி விட்டது.

கடந்த 45 வருடங்களாக நடைமுறையில் இருக்கும் பயங்கரவாதத் தடைச் சட்டத்துக்கு மாற்றீடாக இந்தச் சட்டமூலத்தை அரசு முன்வைத்துள்ளது.

இப்போது நடைமுறையில் இருக்கும் பயங்கரவாதத் தடைச் சட்டம் காட்டுமிராண்டித்தனமானது, மனித நாகரிகத்திற்கு ஒவ்வாதது, நீதி முறையற்றது என்றெல்லாம் நீண்ட பல தசாப்தங்களாக சர்வதேச ரீதியிலும் உள்நாட்டிலும் மோசமாக விமர்சிக்கப்பட்டு வருகையில், அந்தச் சட்டத்தை வேறு சட்டமூலம் வாயிலாக மாற்றியமைப்போம் என்று உறுதி கூறி வந்த இலங்கை அரசு, அந்தத் திசையில் இப்போது காத்திரமான நகர்வை முன்னெடுத்திருப்பதை இந்த நடவடிக்கை வெளிப்படுத்துகின்றது.

நாடாளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மை இல்லாத - வெறுமனே சாதாரண அறுதிப் பெரும்பான்மையை மட்டுமே கொண்டிருக்கின்ற - அரசினால், இப்போது நடைமுறையில் உள்ள பயங்கரவாத தடைச் சட்டம் போன்ற வலிமையான அதிகாரம் தரும் ஒரு புதிய சட்டத்தை மீள உருவாக்கி நடைமுறைப்படுத்துவது சாத்தியமற்றது என்ற கருத்து நிலைப்பாட்டை உறுதிப்படுத்தும் விதத்திலேயே உயர்நீதிமன்றத்தின் இப்போதைய பரிந்துரை வந்துள்ளது.

அரசு சமர்ப்பித்துள்ள இந்தப் பயங்கரவாத எதிர்ப்புச் சட்டமூலத்தின் சில பிரிவுகளை நிறைவேற்றுவதற்கு நாடாளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மை ஆதரவு அவசியம் என்றும் -

இன்னும் சில பிரிவுகளை நிறைவேற்றுவதற்கு நாடாளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மை ஆதரவுடன் சர்வஜன வாக்கெடுப்பு மூலம் மக்களின் அனுமதியையும் பெற வேண்டும் என்றும் -

உயர் நீதிமன்றம் தனது பரிந்துரையில் சுட்டிக்காட்டி உள்ளது. உயர்நீதிமன்றம் சுட்டியுள்ள இந்த தேவைப்பாடுகளை நிறைவு செய்ய முடியாத இடத்தில், சம்பந்தப்பட்ட பிரிவுகளை உயர்நீதிமன்றத்தின் வழிகாட்டல்படி நீக்கி அல்லது மாற்றி அந்தச் சட்டமூலத்தை நிறைவேற்ற முடியும் என்றும் உயர்நீதிமன்றம் தெளிவுபடுத்தியிருக்கின்றது.

உயர்நீதிமன்றத்தின் இந்தப் பரிந்துரையில் மக்களின் அடிப்படை உரிமைகள் தொடர்பில் சாதக, பாதகமான நிலைகள் உள்ளன எனச் சுட்டிக்காட்டப்படுகின்றது.

பாதுகாப்புத் தரப்போ, ஆளும் தரப்போ தம்மிஷ்டப்படி 'பயங்கரவாதம்' என்ற சொல்லுக்கு அர்த்தம் கற்பிக்கும் வாய்ப்பை உயர்நீதிமன்றத்தின் தீர்ப்பு முழு அளவில் கட்டுப்படுத்தி இருப்பதாகத் தெரிகின்றது.

தொழிற்சங்கப் போராட்டங்கள், அரச எதிர்ப்பு நடவடிக்கைகள் போன்ற - அரசமைப்பினால் உறுதிப்படுத்தப்பட்ட - அடிப்படை உரிமைகளை 'பயங்கரவாதம்' என்று அடையாளப்படுத்தி, அவற்றை இந்தச் சட்டத்தின் மூலம் அடக்குவதற்கு வாய்ப்பாக அமைந்த இந்தச் சட்டமூலத்தின் பிரிவுகளுக்கு உயர்நீதிமன்றம் தனது பரிந்துரை மூலம் முடக்குப் போட்டிருக்கின்றது.

ஆயினும் -

புதிதாக ஜனாதிபதிக்கு மேலும் பல அதிகாரங்களை - அதுவும் உணர்வுபூர்வமான, மோசமாகக் கையாளப்படக்கூடிய விடயங்களில் அதிக அதிகாரங்களை - கட்டுமட்டுமில்லாமல் வழங்கும் புதிய பிரிவுகளுக்கு உயர்நீதிமன்றம் தடை போடாமல் அனுமதித்திருக்கின்றமை பல தரப்புகளுக்கும் விசனத்தை ஏற்படுத்தி உள்ளது.

இயக்கங்கள், கட்டமைப்புக்களைத் தடை செய்யும் பிரகடனங்களையும், முக்கிய இடங்கள், பிரதேசங்களைக் குறித்து ஒதுக்கி மக்கள் அங்கு செல்வதற்குத் தடை விதிக்கும் கட்டளைகளையும் பிறப்பிக்க ஜனாதிபதிக்கு அதிக அதிகாரங்களை இந்தச் சட்டம் வழங்குகிறது

அப்படி அதிகாரம் பெற அனுமதிப்பது மக்களின் அடிப்படை உரிமைகளை மீறும் மோசமான செயற்பாடு என்ற வாதம் நீதிமன்றத்தில் பல தரப்புகளினாலும் வாதாட்டமாக முன்வைக்கப்பட்டிருந்தது.

எனினும், ஜனாதிபதியின் அத்தகைய நடவடிக்கைகளைச் சட்டச் சவாலுக்கு உட்படுத்தும் நிவாரணப் பரிகாரம் சட்டமூலத்தில் உள்ளதுதானே என்று நீதிமன்றம் தன் விசாரணைகளின் போது குறிப்பிட்டு இருந்தது. ஆனால் தமது இறுதிப் பரிந்துரையில் அது குறித்து எதுவுமே குறிப்பிடாமல் அந்த ஏற்பாட்டை சாதாரண அறுதிப் பெரும்பான்மையுடன் சட்டமாக்க நீதிமன்றம் அனுமதித்துள்ளது.

இந்தச் சட்டமூலத்திற்கு எதிராக வாதாடிய மனித உரிமை அமைப்புகள், ஆர்வலர்கள் மத்தியில் இந்த விடயம் குறித்து உயர்நீதிமன்றம் பரிந்துரை ஏதும் செய்யாமல் மௌனம் காட்டியமை அதிர்ச்சியைத் தந்து இருப்பதும் கவனிக்கததக்கது.




# யுக்திய நடவடிக்கைகளின் கீழ் கட்டுநாயக்காவில் இருவர் கைது!

கட்டுநாயக்க விமான நிலையத்தில் வைத்து இரண்டு வர்த்தகர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கட்டுநாயக்க விமான நிலையத்தில் அனைத்து சோதனைகளையும் தவிர்த்து தீர்வை வரி செலுத்தாமல் 43 லட்சத்து 42 ஆயிரம் ரூபா பெறுமதியான வெளிநாட்டு சிகரெட்டுகளை எடுத்துச் சென்ற இருவரே விமான நிலைய பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

யுக்திய நடவடிக்கையின் கீழ் இந்த கைது இடம்பெற்றுள்ளது என்று கூறப்படுகிறது.

கட்டுநாயக்க விமான நிலையப் பொலிஸ் நிலைய அதிகாரிக்கு கிடைத்த தகவலுக்கு அமைய இந்த சுற்றிவளைப்பு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

கைது செய்யப்பட்ட இரு வர்த்தகர்கள் கொழும்பு பொரளையில் வசிக்கும் 29 மற்றும் 25 வயதுடையவர்கள். இவர்கள் அடிக்கடி விமான பயணங்களில் ஈடுபட்டு வெளிநாட்டுப் பொருள்களை இலங்கைக்கு கொண்டு வந்து விற்பனை செய்து வந்துள்ளனர்.

இவர்கள் நேற்று பிற்பகல் இந்தியாவின் சென்னையில் இருந்து கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்துள்ளனர்.

அவர்களின் பொதிகளில் மறைத்து வைக்கப்பட்டிருந்த 33,400 சிகரெட்டுகளை பொலிஸார் மீட்டுள்ளனர்.

சட்டவிரோதமான முறையில் இந்த சிகரெட் கையிருப்பை இலங்கைக்கு கொண்டு வந்த இரண்டு வர்த்தகர்களுக்கு எதிரான வழக்கு இன்று நீர்கொழும்பு நீதிவான் நீதிமன்றில் தாக்கல் செய்யப்படவுள்ளது.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை கட்டுநாயக்க பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.



# போதை மாத்திரைகள் விற்பனை செய்த சந்தேகத்தில் மருந்தக உரிமையாளர் கைது!

போதைப் பொருளுக்கு அடிமையானவர்களுக்கு அதிக விலைக்கு போதை மாத்திரைகளை விற்பனை செய்த குற்றச்சாட்டின் பேரில் மருந்தக உரிமையாளர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

இரத்மலானை, காலி வீதியில் அமைந்துள்ள பிரபல மருந்தகம் ஒன்றின் உரிமையாளரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார் என்று கல்கிசை குற்றப் புலனாய்வுப் பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

அந்த மருந்தகத்தில் பத்தாயிரத்துக்கும் மேற்பட்ட போதை மாத்திரைகள் கண்டுபிடிக்கப்பட்டு பொலிஸாரால் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன.

போதைக்கு அடிமையானவர்கள் பலர் இந்த மருந்துக் கடைக்கு அடிக்கடி வருகை தருவது அவதானிக்கப்பட்ட நிலையில் பொலிஸார் திடீர் சோதனை மேற்கொண்டு, போதை மாத்திரைகளுடன் மருந்தக உரிமையாளரைக் கைது செய்துள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

# ஹக்கீமுடன் சந்திப்பு!



இலங்கைக்கு உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டுள்ள ஈரான் இஸ்லாமிய குடியரசின் வெளி விவகார அமைச்சர் ஹொசேன் அமிர் அப்தொல்லாஹியன் மற்றும் அவரது உயர்மட்ட தூது குழுவினருக்கும், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ரவூப் ஹக்கீமுக்கும் இடையிலான கலந்துரையாடல் நேற்றுச் செவ்வாய்க் கிழமை (20) மாலை கொழும்பு ஹில்டன் ஹோட்டலில் இடம்பெற்றது.




# மின்சாரக் கட்டணத்தில் திருத்தம் செய்ய யோசனை முன்வைப்பு!

இலங்கையில் மின்சாரக் கட்டணத்தில் திருத்தம் செய்ய இலங்கை மின்சாரசபை திட்டமிட்டுள்ளது.

இதன்படி மின்சாரக் கட்டணத்தை சுமார் 20 வீதத்தால் குறைப்பதற்கு இலங்கை மின்சார சபை யோசனை முன்வைக்க உள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது.

இலங்கை பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழுவிடம் இந்த யோசனை சமர்ப்பிக்கப்பட உள்ளது.

மின்சாரக் கட்டணங்களைக் குறைப்பது தொடர்பில் கடந்த 15 ஆம் திகதி பொது மக்களின் கருத்துக்கள் கேட்டறியப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

பொதுப் பயன்பாடுகள் ஆணைக் குழுவால் பொது மக்களின் கருத்துக்கள் கேட்டறிந்து கொள்ளப்பட்டதன் பின்னர், மின்சாரக் கட்டணத் திருத்தம் தொடர்பிலான யோசனையை முன்வைக்குமாறு இலங்கை மின்சார சபையிடம் கோரப்பட்டுள்ளது என்று செய்தி வெளியாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது.




# பாடசாலை மாணவர்களுக்கு கற்றல் உபகரணம் வழங்கல்




(அஸ்ஹர்இப்றாஹிம்)

ஏ.ஆர்.மன்சூர் பௌண்டேசனால் சாய்ந்தமருது பொலிவேரியன் குடியேற்ற கிராமத்திலுள்ள எம்.எஸ்.காரியப்பர் வித்தியாலயத்தில் கல்வியை தொடர்வதில் பொருளாதார ரீதியாக சிரமப்படும் மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட்டுள்ளன.

சாய்ந்தமருது கேட் முதலியார் எம்.எஸ்.காரியப்பர் வித்யாலயத்தில் பாடசாலை அதிபர் ஆரிப்பின் வேண்டுகோளுக்கு இணங்க ஏ.ஆர்.மன்சூர் பவுண்டேஷனின் ஸ்தாபக தலைவி சட்டத்தரணி மர்யம் மன்சூர் நளிமுதீனினால் கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட்டன.

இந்த நிகழ்வில் பாடசாலை ஆசிரியர்கள், மாணவர்கள் மற்றும் டாக்டர் எஸ்.நளிமுதீன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

# அறநெறி பாடசாலை மாணவர்களுக்கு பஞ்சாங்க நாள் குறிப்பு வழங்கி வைப்பு

(எம்.எம்.றம்ஸீன்)

இந்து சமய கலாசார திணைக்களத்தின் அனுசரணையில் வெளியிடப்பட்ட பஞ்சாங்க நாட்காடியைக் காரைதீவு பிரதேச செயலாளர் சிவஞானம் ஜெகராஜனிடம் மாவட்ட கலாசார உத்தியோகத்தர் கு.ஜெயராஜ் வழங்கி வைத்தார்.

பின்னர் அதனை பிரதேச செயலாளர் பிரதேச செயலக கலாசார உத்தியோகத்தர் அவர்களிடம் கையளித்தார். இந்த நிகழ்வு காரைதீவு பிரதேச செயலாளர் அலுவலகத்தில் இடம் பெற்றது.



# இந்தியாவில் பட்டப்படிப்பை முடித்த மாணவர்களுக்கு வேலை வாய்ப்பு

## கிழக்கு மாகாண ஆளுநர் நடவடிக்கை



(ஹஸ்பர்)

இந்தியாவில் பட்டப்படிப்பை முடித்துவிட்டு வேலை வாய்ப்புகள் இல்லாது சிரமப்படும் மாணவர்களுடன் கிழக்கு ஆளுநர் கலந்துரையாடல் ஒன்றை நடத்தியுள்ளார்.

இந்தியாவில் பட்டப்படிப்பை முடித்துவிட்டு நாடு திரும்பி வேலை வாய்ப்புகள் இல்லாது சிரமப்படும் மாணவர்களுக்கு வேலை வாய்ப்புகளை உருவாக்கிக் கொடுக்கக் கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான் நடவடிக்கைகளை எடுத்துள்ளார்.

இந்தச் சந்திப்பு திருகோணமலையில் உள்ள ஆளுநர் செயலகத்தில் நேற்று முன்தினம் (19) இடம்பெற்றது.

இந்தியாவில் பட்டப்படிப்பை முடித்துள்ள இந்த மாணவர்கள் அரச வேலை பெறுவதில் சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

இவர்களது ஆவணங்களை 'ஒவ்பர்' அமைப்பின் உதவியுடன் ஒழுங்கு-படுத்த ஆலோசனைகளை ஆளுநர் வழங்கியுள்ளார்.

அத்துடன் இந்தியாவில் இருந்து திருப்பி அனுப்பப்பட்ட குடும்பங்களின் வாழ்வாதாரத்துக்கு உதவும் வகையில் தலா 50 ஆயிரம் ரூபா ஒதுக்கீடும் செய்யவும் ஏற்பாடு செய்துள்ளார்.

# பால் நிலை சமத்துவ விழிப்புணர்வு

(எம்.எம்.றம்ஸீன்)

காரைதீவில் பால் நிலை சமத்துவம் தொடர்பான விழிப்புணர்வுக் கலந்துரையாடல் பிரதேச செயலாளர் சிவஞானம் ஜெகராஜன் தலைமையில் பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் சிறுவர் மற்றும் மகளிர் பிரிவினரின் ஏற்பாட்டில் இடம்பெற்றது .

இதன்போது பல்வேறு பால்நிலை தொடர்பான பிரச்சினைகள் இனம் காட்டப்பட்டு இதற்கான தீர்வு தொடர்பான முன்வைப்புக்கள் தொடர்பில் கலந்துரையாடப்பட்டது.





இந்த நிகழ்வில் பிரதேச செயலக உதவிப் பிரதேச செயலாளர் மற்றும் பல்வேறு சமுக அமைப்புக்களின் பிரதிநிதிகள், சுகாதார வைத்திய அதிகாரி, பொலிஸ் நிலைய பொறுப்பு வாய்ந்த உத்தியோகத்தர் மற்றும் பிரதேச செயலக உத்தியோகத்தர்கள் கலந்து கொண்டனர்.



# கெம்பியன் தமிழ் மகா வித்தியாலயத்தில் 12 வருடங்களின் பின்னர் ஆரம்பப் பிரிவு

(பொகவந்தலாவ நிருபர்)

ஹட்டன் கல்வி வலயத்துக்கு உட்பட்ட பொகவந்தலாவ கெம்பியன் தமிழ் மகா வித்தியாலயத்தில் 12 வருடங்களுக்குப் பின்னர் ஆரம்பப் பிரிவு அங்குரார்ப்பணம் செய்யப்பட்டுள்ளது.

வித்தியாலயத்தின் அதிபர் தமிழ்வாணன் தலைமையில் நேற்று செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற இந்த நிகழ்வில் இலங்கை தொழிலாளர் காங்கிரசின் உபதலைவரும் நுவரெலியா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான மருதபாண்டி ராமேஷ்வரன், இலங்கை தொழிலாளர் காங்கிரசின் பிரதித் தலைவரும் முன்னாள் மத்திய மாகாணசபை உறுப்பினருமான கணபதி கனகராஜ், ஹட்டன் வலயக் கல்வி பணிப்பாளர் ஆர்.விஜேயந்திரன், நீர்வழங்கள் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு சமுக அபிவிருத்தி அமைச்சின் மக்கள் தொடர்பாடல் பிரிவு அதிகாரி தயாளன், நோர்வூட் பிரதேச சபையின் முன்னாள் உறுப்பினர் பிரபு, இலங்கை தொழிலாளர் காங்கிரசின் இளைஞர் அணியின் சிரேஷ்ட அமைப்பாளர் இளையராஜா, அயல் பாடசாலைகளின் அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்கள் கலந்து கொண்டனர்.

ஆயிரம் பாடசாலைகள் வேலைத் திட்டத்தின் கீழ் பொகவந்தலாவ கெம்பியன் தமிழ் மகாவித்தியாலயத்தில் இருந்து ஆரம்பப் பிரிவு நீக்கப்பட்டதன் பின்னர் கெம்பியன் பகுதியில் உள்ள மாணவர்கள் ஆரம்பப் பிரிவுக்கு கெம்பியன் எல்டொப்ஷ், தமிழ் வித்தியாலயம், சென் விஜயன்ஷ் தமிழ் வித்தியாலயம் ஆகியவற்றுக்குச் சென்றனர்.

தற்போது ஆரம்பப் பிரிவு இங்கு ஆரம்பிக்கப்பட்ட நிலையில் புதிய கட்டடம் ஒன்றை அமைப்பதற்குக் காணிக்கான அனுமதி கடிதம் வழங்கி வைக்கப்பட்டதோடு புதிய கட்டடத்துக்கு 50 லட்சம் ரூபா நிதியும் கிடைக்கவுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.










# கிழக்கு மாகாண சபையோடு இணைந்து 10 ஆவது தேசிய சாரணர் ஜம்போரி

## மகிழ்ச்சி தெரிவித்துள்ளார் திருமலை அரச அதிபர்

**(ஹஸ்பர்)**

10 ஆவது தேசிய சாரணர் ஜம்போரியை கிழக்கு மாகாண சபையோடு இணைந்து நடத்துவதையிட்டு மகிழ்ச்சி அடைகின்றோம். ஜம்போரியை சிறப்பாக நடத்தத் தேவையான ஒத்துழைப்புகள் உயர்ந்த மட்டத்தில் வழங்கப்பட்டு வருகின்றன.

திருகோணமலை மாவட்ட அரசாங்க அதிபர் சாமிந்த ஹெட்டியாரச்சி நேற்று (20) திருகோணமலை ஸ்ரீ கோணேஸ்வரா இந்துக் கல்லூரியில் நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் இதனைத் தெரிவித்தார்.

எதிர்வரும் 26 ஆம் திகதிவரை ஜம்போரி நடைபெறவுள்ளது. கலந்து கொள்ளும் சாரண தலைவர்களுக்குத் தேவையான வசதிகளைப் பல நிறுவனங்கள் இணைந்தும் வழங்கி வருகின்றன.

தற்போது சாரணர்கள் தமக்கான கூடாரங்களை அமைத்து வருகின்றனர். தேசிய சர்வதேச அடிப்படையில் 11 ஆயிரத்து 500 இற்கு மேற்பட்ட சாரணர்கள் இதில் கலந்து கொள்கின்றனர்.

சுகாதாரம், பாதுகாப்பு, குடி தண்ணீர் உட்பட பல வசதி வாய்ப்புகளையும் தடங்கலின்றி வழங்குவதற்கான அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளன.

திருகோணமலை பொது வைத்தியசாலையில் சாரணர்களுக்கான விசேட வைத்திய வசதி பிரிவொன்றும் பிரத்தியேகமாக ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

# மக்களது கோரிக்கைகளை நிறைவேற்ற அட்டாளைச்சேனைக்கு முஷாரப் எம்.பி.



**(எம்.எம்.றம்ஸீன்)**

மக்களின் நீண்ட காலக் கோரிக்கைகளை நிவர்த்தி செய்யும் நோக்குடன் திகாமடுல்ல மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சட்டத்தரணி எஸ்.எம்.எம்.முஷாரப் அட்டாளைச்சேனைக்கு வருகை தந்துள்ளார்.

இதன்போது நாடாளுமன்ற உறுப்பினர முஷாரப், பிரதேச முக்கியஸ்தர்கள் மற்றும் இளைஞர்களால் அழைத்து வரப்பட்டார். இதுவரை காலமும் அபிவிருத்தி செய்யப்படாமல் புறக்கணிக்கப்பட்டுவரும் பாதைகளையும் அவருக்கு நேரில் காண்பித்தனர். ஆளுநரிடம் சமர்ப்பிப்பதற்கான மகஜர் ஒன்றையும் பொது மக்கள் இதன்போது கையளித்தனர்.

இந்தப் பிரதேச மக்களால் முன்வைக்கப்பட்ட கோரிக்கைகள் தொடர்பில் கவனம் செலுத்துவதாகவும், மேலதிக நடவடிக்கைகள் குறித்து கிழக்கு மாகாண ஆளுநரிடம் கலந்துரையாடவுள்ளார் என்றும் நாடாளுமன்ற உறுப்பினர் முஷாரப் இதன்போது தெரிவித்தார்.



# கொழும்பு ஜே.ஆர்.ஜெயவர்த்தன மண்டபத்தில் இரத்ததான நிகழ்வு

(அஸ்ஹர் இப்றாஹிம்)

“மனிதகுலத்துக்கான இரத்தம்” என்னும் தொனிப் பொருளில் இரத்ததான முகாம் அண்மையில் கொழும்பு ஜே.ஆர். ஜெயவர்த்தன மண்டபத்தில் இடம் பெற்றது.

ஐ.எஸ்.ஆர்.சி. மற்றும் எச்.ஆர்.சி. ஆகியவற்றின் அனுசரணையுடன் கொழும்பு மத்தி வை.எம்.எம்.ஏயால் இரத்ததான நிகழ்வு ஏற்பாடு செய்யப் பட்டது.

இந்த இரத்ததான முகாம் ஒற்றுமை மற்றும் இரக்க உணர்வின் சான்றாக அமைந்தது.

விலை மதிப்பற்ற குருதிக் கொடை யாளர்களின் தாராளமான பங்களிப்புடன், உயிர்களைக் காப்பாற்றுவதற்கும் மனித நேயத்தின் விழுமியங்களை மேம் படுத்துவதற்கும் இன, மத, மொழிக ளுக்கு அப்பால் இது இடம்பெற்றுள் ளது.







# கண்டல் தாவர வளர்ப்பு தொடர்பில் மட்டக்களப்பில் கலந்துரையாடல்





(பழுவூரான்)

மட்டக்களப்பில் கண்டல் தாவரம் தொடர்பான விசேட கலந்துரையாடல் மாவட்ட மேதிக அரச அதிபர் திருமதி சுதர்ஷினி ஸ்ரீ காந்த் தலைமையில் மாவட்ட செயலக மாநாட்டு மண்டபத் தில் நேற்று முன்தினம் திங்கட்கிழமை (19) இடம் பெற்றது.

மட்டக்களப்பு மாவட்டத்தின் பிரதேச செயலர் பிரிவுகளில் கண்டல் தாவர வளர்ப்புக்காக அடையாளப்படுத்தப் பட்ட பொருத்தமான இடங்களைப் பாது காத்துக் கண்டல் தாவரங்களை வளர்ப்பதற்குத் தேவையான நடவடிக் கைகள் மேற்கொள்வது தொடர்பாக இதன் போது விரிவாகக் கலந்துரை யாடப்பட்டுள்ளது.

இந்த நிகழ்வில் பேராசிரியர் மதிவேந்தன், பிரதேச செயலாளர்கள், துறைசார் நிபுணர்கள், மாவட்ட தலைமை காணி உத்தியோகத்தர், குடியேற்ற உத்தியோகத்தர்கள், தனி யார் துறையினர் எனப் பலர் கலந்து கொண்டனர்.




# கல்முனை வலயப் பாடசாலைகளுக்கு இலவச சீருடை, புத்தகம் விநியோகம்

**(பாறுக் ஷிஹான், அஸ்ஹர் ஆதம்)**

கல்முனை வலயப் பாடசாலைகளுக்கான இலவச சீருடை மற்றும் இலவச நூல் விநியோக நிகழ்வு நேற்று (20) இடம்பெற்றது.

கல்முனை வலயக் கல்விப் பணிப்பாளர் எம்.எஸ்.சஹ்துல் நஜீம் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வுக்கு கல்முனைத் தொகுதி அபிவிருத்திக் குழுத் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான எஸ்.எம்.எம்.முஸாரப் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டார்.

மாணவர்களது கலை நிகழ்வுடன் இடம்பெற்ற இந்த நிகழ்வில் கல்முனை வலயத்திலுள்ள கல்முனை முஸ்லிம் மற்றும் கல்முனை தமிழ் கோட்டங்களைச் சேர்ந்த 31 பாடசாலை மாணவர்களுக்கு இவை வழங்கப்பட்டுள்ளன.

இதன் போது பிரதிக் கல்விப் பணிப்பாளர்கள், கோட்டக் கல்விப் பணிப் பணிப்பாளர்கள், அதிபர்கள் உட்பட பலரும் கலந்து கொண்டனர்.







# கல்லடி வேலூர் ஸ்ரீ சக்தி வித்தி. திங்களன்று தரமுயர்த்தப்பட்டது

(பழுவூரான்)

மட்டக்களப்பு, கல்லடி, வேலூர் ஸ்ரீ சக்தி வித்தியாலயத்தைத் தரமுயர்த்தும் நிகழ்வு வித்தியாலயத்தின் அதிபர் எஸ்.பிரான்சிஸ் தலைமையில் நேற்று முன்தினம் திங்கட்கிழமை (19) இடம் பெற்றது.

சிறுவர் நேயப் பாடசாலையான கல்லடி வேலூர் ஸ்ரீ சக்தி வித்தியால யமானது தரம் ஒன்பது வரை இருந்து வந்த நிலையில், மட்டக்களப்பு மாவட்ட ஒருங்கிணைப்பு குழுத் தலைவரும் இராஜாங்க அமைச்சருமான சிவ நேசதுரை சந்திரகாந்தனின் சிபாரிசுக்கு அமைய கல்வி அமைச்சினால் தர முயர்த்தப்பட்டுள்ளது.

இந்த நிலையில் இராஜாங்க அமைச்சர் சிவநேசதுரை சந்திரகாந் தனால் 10 மற்றும் 11 ஆம் தர வகுப்புக் கள் வைபவ ரீதியாக ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளன.

மட்டக்களப்பு இராமகிருஷ்ணமிஷன் உதவிப் பொது முகாமையாளர் சுராஜ் சிதானந்தா மகராஜின் ஆசியுரை இடம் பெற்றது. தொடர்ந்து விசேட மற்றும் பிரதம அதிதி உரைகள் இடம் பெற்றன.

அரசால் வழங்கப்படும் இலவசப் பாடப் புத்தகங்கள் இராஜாங்க அமைச்சர் உள்ளிட்ட அதிதிகளால் மாணவர்க ளுக்கு வழங்கப்பட்டன.

இந்த நிகழ்வில் மதகுருமார், மட்டக் களப்பு வலயக் கல்வி அலுவலகத்தின் பிரதிக் கல்விப் பணிப்பாளர் (நிர்வாகம்) திருமதி சாமினி ரவிராஜ், பிரதிக் கல்விப் பணிப்பாளர் (திட்டமிடல்) திருமதி. சீ.சுபாஹரன், கோட்டக்கல்வி அலுவலக அதிகாரிகள், முன்னாள் அதிபர்கள், ஆசிரியர்கள், பழைய மாணவர்கள் கலந்து கொண்டனர்.













# ஹெமில்டன், டேர்ப்பன்டைன் வனத்தில் நூற்றுக் கணக்கான ஏக்கர் எரிந்து நாசம்

(மஸ்கெலியா நிருபர் )

நல்லதண்ணி பொலிஸ் நிலையத் துக்கு மேல் சிவனொளிபாத மலைக்கு அண்டிய ஹெமில்டன், டேர்ப்பன்டைன் வனப் பகுதியில் நூற்றுக் கணக்கான ஏக்கர் எரிந்து நாசமாகியுள்ளது.

மவுஸ்சாக்கலை நீர்த்தேக்கத்துக்கு மேல் உள்ள ரிக்காடன் பகுதியில் உள்ள சிவனொளிபாத மலைத் தொடர் வனப் பகுதியில் ஏற்பட்ட தீ கடந்த 03 நாள் களாகத் தொடர்ந்து பரவிய நிலையில் இந்த தீ, தற்போது சிவனொளிபாத மலைத் தொடர் வனப் பகுதியில் உள்ள எமிலடன் டேப்பன் டைன் வனத்தில் பரவியுள்ளது.



இந்தப் பகுதியில் பலத்த காற்றுடன் கடும் வெப்பமான காலநிலை தோன்று வதால் தீ வேகமாகப் பரவி வருகிறது.

தீயை அணைப்பது மிகவும் சயிரம மாக உள்ளது என்று நல்லதண்ணி பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மவுஸ்ஸாக்கலை நீர்த்தேக்கத்துக்கு நீர் வழங்கும் நீர் நிலைகள் அதிகம் உள்ள பகுதியில் இந்தத் தீ பரவியதால் வன விலங்குகள் அழிந்து போகும் நிலை தோன்றியுள்ளது அத்துடன் பெரும் சுற்றுச்சூழல் பாதிப்பு ஏற்பட்டுள் ளது எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஒவ்வொரு முறையும் வறண்ட கால நிலை ஏற்படும் போது இந்தப் பகுதியில் உள்ள சில விஷமிகள் வேட்டையாடு வதற்காகவும் வேடிக்கைக்காகவும் இந்த தீயை மூட்டுகின்றனர். இவர்கள் இனங் காணப்பட்டு அவர்களுக்கு எதிராகச் சட்ட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்று அந்தப் பகுதி மக்கள் தெரிவிக் கின்றனர்.

நல்லதண்ணி பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி பிரதான பொலிஸ் பரிசோதகர் சாந்த வீரசேகர பிரதேச வாசிகளுடன் லக்சபான தோட்டத்தில் உள்ள தொழிலாளர்களையும் இணைந்து தீ பரவாமல் தடுக்கப் பலத்த முயற்சிகளை மேற்கொண்டனர்.

# திட்டமிடல் அபிவிருத்தி உத்தியோகத்தர்களை பதவி நிலையாளர்களாகக் கருத அறிவுறுத்து!

(அஸ்ஹர் ஆதம் )

கொள்கைத் திட்ட அமுலாக்கல் மற்றும் நாடாளுமன்ற அலுவல்கள் அமைச்சின் கீழ் 1994-1999 காலப் பகுதியில் இணைத்துக் கொள்ளப்பட்ட திட்டமிடல் அபிவிருத்தி உத்தியோகத் தர்களை பதவி நிலை உத்தியோகத்தர் களாக கருதி செயற்படுமாறு பொது நிர்வாக உள்நாட்டலுவல்கள் மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு சகல மாவட்ட செயலாளர்க ளுக்கும் அறிவித்துள்ளது.

தாபன பணிப்பாளர் நாயத்தின் ஆலோசனைக்கு அமைய இந்த அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

திட்டமிடல் அபிவிருத்தி உத்தியோ கத்தர்களின் பதவி நிலை தொடர்பில் அமைச்சுகள், மாவட்ட மற்றும் பிரதேச செயலகங்களில் காணப்பட்டு வந்த சர்ச்சைகள் தொடர்பாகத் திட்டமிடல் அபிவிருத்தி உத்தியோகத்தர்களின் தேசிய சங்கம் பொது நிர்வாக உள்நாட் டலுவல்கள் மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் செயலாள ரின் கவனத்துக்கும் தாபன பணிப்பாளர் நாயத்தின் கவனத்துக்கும் கொண்டு வரப்பட்டது.

இந்த நிலையில் இந்தச் சர்ச்சைக ளுக்கு முற்றுப்புள்ளி வைக்கும் பொருட்டு சகல மாவட்ட செயலாளர்க ளுக்கும் பொது நிர்வாக உள்நாட்டலுவல் கள் மாகாண சபைகள் மற்றும் உள்ளூ ராட்சி அமைச்சின் மூலம் இவ்வறி வுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது.

1994-1999 காலப் பகுதியில் கொள்கை திட்ட அமுலாக்கல் மற்றும் நாடாளுமன்ற அலுவல்கள் அமைச்சின் கீழ் நாடு தழுவிய ரீதியில் அமைச்சுக்கள் மாவட்ட திட்டமிடல் செயலகங்கள் மற்றும் பிரதேச செயலங்களுக்கு 532 அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் விஷேட நியமனம் ஒன்றின் மூலம் நியமிக்கப்பட்டனர்.

இதில் ஒரு தொகுதியினர் 2010 ஆம் ஆண்டு மிகை ஆளணி அடிப்படை யில் இலங்கை திட்டமிடல் சேவைக்குள் உள்வாங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.



# மன்னார் மாற்றுத் திறனாளிகளுக்கு சுய தொழில் வாய்ப்புக்கு நடவடிக்கை

(மன்னார் நிருபர்)

மன்னார் மாவட்டத்தில் உள்ள மாற்றுத் திறனாளிகளுக்குச் சுய தொழில் வாய்ப்புகளை ஏற்படுத்திக் கொடுத்து அவர்களுக்கு நிரந்தரமான வருமானம் ஒன்றைப் பெற்றுக் கொடுப்பதற்கு நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டு வரு கிறது என்று மன்னார் நலன்புரிச் சங்கம் ஐக்கிய இராச்சியத்தின் தலைவர் ஜேம்ஸ் பத்திநாதன் தெரிவித்தார்.

மன்னார் நலன்புரிச் சங்கம் ஐக்கிய ராச்சியத்தால் மன்னார் மாவட்டத்தில் உள்ள மாற்றுத் திறனாளிகளுக்குச் சுய தொழில் வாய்ப்புகளை ஏற்படுத்திக் கொடுப்பது தொடர்பான அவசர கலந்துரையாடல் நேற்று (20) செவ்வாய்க் கிழமை மன்னார் மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.

மன்னார் மாவட்ட அரச அதிபர் கே.கனகேஸ்வரன் தலைமையில் இடம்பெற்ற கலந்துரையாடலில் மன்னார் நலன்புரிச் சங்கம் ஐக்கிய இராச்சியத்தின் தலைவர் ஜேம்ஸ் பத்திநாதன், துறை சார்ந்த அதிகாரிகள் மற்றும் மாற்றுத் திறனாளிகள், கலந்து கொண்டனர்.





## மத்ரஸா மாணவனின் மரணம்;

# தொழிநுட்பவியலாளர் உட்பட 4 பேர் பொலிஸாரால் கைது!

(பாறுக் ஷிஹான்)

மாணவனின் மர்ம மரணம் தொடர்பிலான சி.சி.டி.வி. காட்சி உள்ளடங்கிய முக்கிய தடயப் பொருள்களை அழித்த குற்றச்சாட்டு அடிப்படையில் சி.சி.டி.வி. தொழிநுட்பவியலாளர் உட்பட 4 சந்தேக நபர்களை கல்முனை நீதிமன்ற கட்டளைக்கமைய சாய்ந்தமருது பொலிஸார் கைது செய்துள்ளனர்.

இந்த வழக்கு கடந்த வியாழக்கிழமை (15) கல்முனை நீதிமன்ற நீதிவான் எம்.எஸ்.எம் சம்சுதீன் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்து கொள்ளப்பட்டது. இந்த நிலையில் மௌலவியின் வேண்டுகோளுக்கு அமைய சி.சி.டி.வி. காணொளிகளை அழித்தவர்களை இனங்கண்டு கைது செய்து மன்றில் முன்னிலைப்படுத்துமாறு பொலிஸாருக்கு நீதிமன்று



கட்டளை பிறப்பிக்கப்பட்டிருந்தது.

இதற்கமைய நேற்று (20) சாய்ந்தமருது பொலிஸ் நிலையத்துக்குச் சி.சி.டி.வி. தொழிநுட்பவியலாளர் உள்ளிட்ட 4 பேர் வரவழைக்கப்பட்டு வாக்குமூலம் பெறப்பட்டது. இந்த நிலையில் சாய்ந்தமருது பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி எஸ்.எல். சம்சுதீன் வழிகாட்டலில் உப பொலிஸ் பரிசோதகர் ரவூப் தலைமையில் அவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவ்வாறு கைது செய்யப்பட்டவர்கள் அட்டாளைச்சேனை சாய்ந்தமருது பகுதியை சேர்ந்தவர்கள் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த நீதிமன்ற தவணையின் போது விசாரணைக்கு எடுத்து கொள்ளப்பட்ட வழக்கில் பாதிக்கப்பட்ட தரப்பினர் சார்பாக ஆஜரான சட்டத்தரணி உட்பட ஏனைய தரப்பினரின் விடயங்களை ஆராய்ந்த நீதிவான் அழிக்கப்பட்ட காணொளிகளை மீள பெற்றுக்கொள்ள மொரட்டுவை கணனி பிரிவுக்கு வன்பொருளை அனுப்பி வைக்குமாறு உத்தரவிட்டார்.

மாணவனின் மரணம் தொடர்பில் கைதான மௌலவியை எதிர்வரும் 29 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறும் கல்முனை நீதிவான் உத்தரவிட்டார்.



# முன்மாதிரியான ஒரு கிராமமாக நயினாதீவை மாற்ற வேண்டும்!

## வடக்கு மாகாண ஆளுநர் வலியுறுத்தல்

நயினாதீவை ஒரு முன்மாதிரியான கிராமமாக மாற்ற வேண்டும் என்று வடக்கு மாகாண ஆளுநர் பி.எஸ்.எம் சார்ள்ஸ் தெரிவித்துள்ளார்.

மக்கள் எதிர்நோக்கும் பிரச்சனைகள் மற்றும் தேவைகள் தொடர்பாக ஆராயும் மற்றுமொரு சிநேகபூர்வ கலந்துரையாடல், உள்ளூராட்சித் திணைக்களத்தின் ஏற்பாட்டில் நயினாதீவு அமுதசுரபி மண்டபத்தில் நேற்று (20) இடம்பெற்றது.

வடக்கு மாகாண ஆளுநர் பி.எஸ்.எம் சார்ள்ஸ் தலைமையில் நடைபெற்ற இந்தக் கலந்துரையாடலில் உள்ளூராட்சித் திணைக்கள ஆணையாளர் எஸ்.பிரணவநாதன் மற்றும் அதிகாரிகள், பொதுமக்கள் என பலரும் கலந்துகொண்டனர்.

இதன்போது ஆளுநர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

யாழ். குடாநாடாடில் காணப்படும் தீவுகளில் ஒன்றான நயினாதீவில் சுமார் ஆயிரம் குடும்பங்களைச் சேர்ந்த ஐயாயிரம் பேர்வரை வசிக்கின்றனர்.

மூன்று கிராம சேவையாளர் பிரிவுகளை உள்ளடக்கிய நயினாதீவு மக்களின் பிரதான ஜீவனோபாயமாக கடற்தொழில் காணப்படுகிறது.

நயினாதீவில் உள்ள பாடசாலைகளின் குறைபாடுகள் மற்றும் மாணவர்கள் எதிர்கொள்ளும் சிக்கல்கள் குறித்து இன்றைய கலந்துரையாடலின்போது கிராம மக்களால் எடுத்துக் கூறப்பட்டது.

பாடசாலைகளுக்கான தேவைகளை உடனடியாக நிவர்த்தி செய்வதற்கு வடக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளருக்கு ஆளுநர் இதன் போது பணிப்புரை விடுத்தார்.

இதேவேளை போக்குவரத்து, குடி தண்ணீர் வசதி உள்ளிட்ட அத்தியாவசிய தேவைகளுக்கும் தீர்வு காண்பதற்கான திட்டவரைபைச் சமர்ப்பிக்குமாறும் ஆளுநர் குறிப்பிட்டார். நயினாதீவை பிளாஸ்ரிக் அற்ற முன்மாதிரிக் கிராமமாக மாற்ற நடவடிக்கை எடுக்குமாறும் குறிப்பிட்டார்.

தீவக மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதற்கான திட்டங்கள் முன்னெடுக்கப்படவுள்ளன. புலம்பெயர் அமைப்புகளும் இதற்கு ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என்று தெரிவித்தார்.

இயற்கை வளங்களைப் பயன்படுத்தி மின்சாரத்தை உற்பத்தி செய்வதற்கான சாத்தியப்பாடுகள் குறித்தும் கவனம் செலுத்தப்படுவதாகக் குறிப்பிடப்பட்டது.

இனமத பேதமின்றி நயினாதீவு மக்கள் இந்தக் கலந்துரையாடலில் பங்கெடுத்தமையானது இந்தக் கிராமத்தை சிறந்த முன்மாதிரியாக மாற்றுவதற்கான சிறந்த ஆரம்பம் என்று ஆளுநர் தெரிவித்தார்.

மக்களுடனான கலந்துரையாடலின் பின்னர் நயினாதீவு அமுதசுரபி அன்னதான மண்டப நிர்வாகத்தினரால் ஏற்பாடு செய்யப்பட்ட மதிய உணவிலும் ஆளுநர் உள்ளிட்ட குழுவினர் கலந்துகொண்டனர்.







இதேவேளை தீவிலுள்ள மதவழிபாட்டுத் தளங்களுக்கும் சென்று மதத்தலைவர்களுடனும் ஆளுநர் கலந்துரையாடினார்.

இதேவேளை இந்தச் சந்திப்பின் போது ஆளுநரால் விடுக்கப்பட்ட பணிப்புரைகளை உடனடியாக செயற்படுத்த நடவடிக்கை எடுக்கபடுவதுடன், நயினாதீவை முன்மாதிரித் தீவாக மாற்ற தேவையான நடவடிக்கைகளை உடனடியாக ஆரம்பித்து அதற்கு உரிய திட்ட வரைபை விரைவில் ஆளுநரிடம் சமர்ப்பிப்பார் என்றும் வடக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் எஸ்.பிரணவநாதன் நயினாதீவு மக்களிடம் உறுதியளித்தார்.




# டில்லியில் மீண்டும் போராட்டம்: 14 ஆயிரம் விவசாயிகள் தயார்

## முன்னேறவிடாமல் தடுக்க பொலிஸாரும் தயார்நிலையில்

மத்திய அரசின் பரிந்துரைகளை நிராகரித்து டில்லி நோக்கிச் செல்லும் போராட்டத்துக்கு விவசாயிகள் ஆயத்தமாகி வருகின்றனர். அவர்களை டில்லி நோக்கி முன்னேறவிடாமல் தடுக்க பொலிஸாரும் தயார்நிலையில் இருக்கின்றனர்.

வேளாண் விஞ்ஞானி சுவாமிநாதன் ஆணைக்குழுவின் பரிந்துரைகளின்படி 23 வகையான பயிர்களுக்கு குறைந்த பட்ச ஆதரவு விலையை நிர்ணயிக்க வேண்டும். இதை உறுதி செய்து சட்டம் இயற்ற வேண்டும் என்பன உள்ளிட்ட 12 அம்ச கோரிக்கைகளை வலியுறுத்தி கடந்த 13 ஆம் திகதி முதல் விவசாயிகள் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

இந்த நிலையில், மத்திய அரசின் பரிந்துரைகளை நிராகரித்து டில்லி நோக்கிச் செல்லும் போராட்டத்துக்கு விவசாயிகள் ஆயத்தமாகி வருகின்றனர். பஞ்சாப் – ஹரியாணாவை அண்மித்த ஷாம்பு எல்லையில் 14 ஆயிரம் விவசாயிகள் தயார் நிலையில் உள்ளனர். 1200 ராக்டர்கள், 300 கார்கள், 10 மினி பஸ்களில் விவசாயிகள் குவிந்துள்ளனர். இதனால், பஞ்சாப், ஹரியாணா என டில்லியை அண்மித்த எல்லைகளில் பொலிஸார், துணை ராணுவத்தினர் குவிக்கப்பட்டுள்ளனர்.

கடந்தமுறை டெல்லியை நோக்கி விவசாயிகள் முன்னேற முயன்றபோது கண்ணீர் புகை குண்டுகள் வீசப்பட்டன. இந்நிலையில் இந்தமுறை அதை எதிர்கொள்ளும் வகையில் விவசாயிகள் முகத்தில் கவசம் அணிந்து தயாராகி வருகின்றனர். சாக்குகளை தண்ணீரில் நனைத்து வைத்துள்ளனர். கண்ணீர் புகை குண்டுகள் வீசப்பட்டால் அவற்றின் மீது போட்டு புகையை மட்டுப்படுத்த தயாராக உள்ளனர். மேலும் டிராக்டர்களையே தங்குமிடம் போல் தயார் செய்தும் வைத்துள்ளனர். எப்படியாவது டெல்லி நோக்கி முன்னேறிவிட வேண்டும் என்று அனைத்து முன்னேற்பாடுகளையும் அவர்கள் செய்து வருகின்றனர்.

தயார்நிலையில் துணை ராணுவம்..
விவசாயிகளின் முன்னேற்பாடுகள் ஒருபுறம் இருக்க காவல்துறையும், துணை ராணுவப்படையினரும் விவசாயிகள் டெல்லிக்குள் நுழையாத வண்ணம் அனைத்து தடுப்பு நடவடிக்கைகளையும் மேற்கொண்டு வருகின்றனர். டிக்ரி மற்றும் சிங்கு எல்லைகளில் காவல்துறையினர் குவிக்கப்பட்டுள்ளனர். பல அடுக்கு தடுப்பு வேலிகள் அமைத்துள்ளனர். கான்க்ரீட் தடுப்புகள், வாகனங்கள் முன்னேற இயலாத வண்ணம் இரும்பு ஆணிகள் பதிக்கப்பட்ட தடுப்புகள் என முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளனர். காசிபூர் எல்லையில் 2 பாதைகள் மூடப்பட்டுள்ளன.

பஞ்சாப் கிஷான் மஸ்தூர் கமிட்டி தலைவர் சர்வான் சிங் பாந்தர் அளித்த பேட்டியில்,

“அரசாங்கம் எங்களை கொலைகூட செய்யட்டும். ஆனால் எங்களை அடக்குமுறைக்கு உள்ளாக்க வேண்டாம். குறைந்தபட்ச ஆதார விலைக்கு சட்டபூர்வ அங்கீகாரத்தை அறிவித்து பிரதமர் இந்தப் போராட்டத்துக்கு முற்றுப்புள்ளி வைக்க வேண்டும் என்பதுதான் எங்களின் வேண்டுகோள். விவசாயிகளை ஒடுக்கும் அரசாங்கத்தை தேசம் ஒருபோதும் மன்னிக்காது. ஹரியாணா கிராமங்களில் துணை இராணுவப் படையினர் குவிக்கப்பட்டுள்ளனர். நாங்கள் செய்த குற்றம்தான் என்ன? உங்களை நாங்கள் பிரதமராக்கியதுதான் குற்றமா? எங்களை பாதுகாப்புப் படைகள் கட்டுப்படுத்தும் என்று நாங்கள் நினைத்துக்கூடப் பார்க்கவில்லை. அரசியல் சாசனத்தை மதித்து நடங்கள். நாங்கள் அறவழியில் அமைதியாக டில்லியை நோக்கி முன்னேற அனுமதியுங்கள். அது எங்களின் உரிமை.” என்று தெரிவித்தார்.

அதேபோல் விவசாய சங்கத் தலைவர் ஜக்ஜித் சிங் டலேவால் கூறுகையில்,

“எங்கள் இலக்கு அமைதிக்கு குந்தகம் விளைவிப்பது அல்ல. எங்கள் கோரிக்கைகளுக்கு அரசு செவிசாய்த்து எங்களுக்குச் சாதகமாக முடிவு எடுக்க வேண்டும் என்றே வலியுறுத்துகிறோம். ஆனால் மட்திய அரசு எங்கள் கோரிக்கைகளை கண்டும்காணமால் கிடப்பில்போடும் உத்தியைக் கடைபிடிக்கிறது. எல்லையில் பல அடுக்கு தடுப்புவேலிகளை அமைத்து நாங்கள் டில்லியை நோக்கி முன்னேறவிடாமல் தடுக்கிறது” என்று பா.ஜ.க. அரசு மீது குற்றம் சுமத்தினார்.

இந்த நிலையில், வீதியால் மட்டுமல்லாமல் ஆறு, கால்வாய் வழியாகக் கூட விவசாயிகள் முன்னேறிவிடக்கூடாது என்று பொலிஸார் கண்காணிப்பை தீவிரப்படுத்தியுள்ளனர். பஞ்சாப் பொலிஸார் மத்திய உள்துறை அமைச்சகம் அளித்த உத்தரவின் பேரில் கெடுபிடிகள் மேற்கொள்ளப் படுகின்றன என தகவல்கள் தெரிவிக்கின்றன.

# ஏப்ரல், மே மாதங்களில் மக்களவைத் தேர்தல்: மார்ச் 9 இற்கு பின்னர் தேர்தல் திகதி அறிவிப்பு

நாடாளுமன்ற மக்களவைத் தேர்தல் திகதியை எதிர்வரும் மார்ச் 9 ஆம் திகதிக்குப் பின்னர் தேர்தல் ஆணையம் அறிவிக்க வாய்ப்பு இருப்பதாக தகவல் வெளியாகி உள்ளது.

நாடாளுமன்ற மக்களவையின் பதவிக்காலம் எதிர்வரும் மே மாதத்துடன் நிறைவடைய உள்ளது. இதையடுத்து, எதிர்வரும் ஏப்ரல், மே மாதங்களில் மக்களவைத் தேர்தலை நடத்த தலைமை தேர்தல் ஆணையம் திட்டமிட்டுள்ளது.

அத்துடன் ஆந்திரா, ஒடிசா உள்ளிட்ட சில மாநில சட்டப்பேரவைகளுக்கும் தேர்தல் நடைபெற உள்ளது. இதற்கான ஏற்பாடுகளை தேர்தல் ஆணையம் செய்து வருகிறது. தேர்தல் முன்னேற்பாடுகள் குறித்து இறுதிகட்ட ஆய்வு செய்வதற்காக தேர்தல் ஆணைய அதிகாரிகள் குழு பல்வேறு மாநிலங்களில் சுற்றுப்பயணம் மேற்கொண்டு வருகிறது.

எதிர்வரும் மார்ச் 8 அல்லது 9 ஆம் திகதி ஜம்மு காஷ்மீர் பாதுகாப்பு நிலவரம் மற்றும் தேர்தல் பணிக்கு தேவையான துணை இராணுவப் படைகள் குறித்து மத்திய அரசின் உயர் அதிகாரிகளுடன் தேர்தல் ஆணைய அதிகாரிகள் குழு ஆலோசனை நடத்த உள்ளது.

அத்துடன், மார்ச் 12, 13 திகதிகளில் ஜம்மு காஷ்மீர் செல்லும் இக்குழுவினர், மக்களவைத் தேர்தலுடன் ஜம்மு காஷ்மீர் யூனியன் பிரதேச சட்டப்பேரவைக்கும் தேர்தல்




நடத்தலாமா என்பது குறித்து களஆய்வு நடத்த உள்ளனர்.

எனவே,எதிர்வரும் மார்ச் 9 ஆம் திகதிக்குப் பிறகு மக்களவை பொதுத் தேர்தல் குறித்த அட்டவணையை தேர்தல் ஆணையம் வெளியிடும் எனஎதிர்பார்க்கப்படுகிறது.

கடந்த 2019 ஆம் ஆண்டு மார்ச் 10 ஆம் திகதி மக்களவை பொதுத் தேர்தல் தொடர்பான அட்டவணையை தேர்தல் ஆணையம் வெளியிட்டது. இதன்படி, அந்த ஆண்டு ஏப்ரல் 11 முதல் மே 19 வரை 7 கட்டங்களாக தேர்தல் நடைபெற்றது. தேர்தல் முடிவுகள் 23 ஆம் திகதி வெளியானது குறிப்பிடத்தக்கது.

# பானை சின்னம் கேட்கும் வி.சி.க தேர்தல்கள் ஆணையத்திடம் மனு

மக்களவைத் தேர்தலில் போட்டியிடும் விடுதலை சிறுத்தைகள் கட்சி வேட்பாளர்களுக்கு பொது சின்னமாக பானை சின்னத்தை ஒதுக்க வேண்டும் என கட்சியில் தலைவர் திருமாவளவன், பொதுச்செயலாளர் துரை.ரவிக்குமார் எம்.பி., எம்.எல்.ஏ. எஸ்.எஸ்.பாலாஜி, துணை பொதுச்செயலாளர் ஆதவ் அர்ஜுனா ஆகியோர் நேற்று டில்லியில் உள்ள தலைமைத் தேர்தல் ஆணையத்திடம் மனு அளித்தனர்.

இதன்பின்னர் செய்தியாளர்களிடம் திருமாவளவன் கருத்து தெரிவிக்கையில்,

“முன் அனுமதி பெறாததால் தேர்தல் ஆணையர் யாரையும் சந்திக்க இயலவில்லை. எனினும், அதற்கென உள்ள பிரிவில் மனுவை சமர்ப்பித்துள்ளோம். மக்களவைத் தேர்தலில் தமிழகம்,



ஆந்திரா, கர்நாடகா, தெலங்கானா, கேரளா ஆகிய தென்னிந்திய மாநிலங்களில் விசிக வேட்பாளர்களை நிறுத்த உள்ளது. எனவே, பானை சின்னத்தை பொது சின்னமாக ஒதுக்க கோரியுள்ளோம்.

கடந்த தேர்தலில் தங்களது சின்னத்தில் போட்டியிட தி.மு.க. வலியுறுத்தியது வெற்றியை கருத்தில் கொண்டே தவிர, வி.சி.கவை நசுக்க வேண்டும் என்ற எண்ணத்தில் இல்லை. பொதுத் தொகுதியில் வி.சி.க. போட்டியிடக் கூடாது என்ற எந்த வரையறையும் இல்லை. இது புதிய கோரிக்கையும் அல்ல.

கடந்த சட்டப்பேரவைத் தேர்தலில் கூட 2 தொகுதிகள் ஒதுக்கப்பட்டன. அதே அடிப்படையில் மக்களவைத் தேர்தலிலும் ஒரு பொது தொகுதி ஒதுக்க வேண்டும் என கேட்கிறோம். தேர்தல் ஆணையம் நடுநிலையாக இல்லை என்னும் சரத்பவாரின் கருத்து புறந்தள்ளக் கூடியது அல்ல. அண்மை காலமாக ஆளுங்கட்சியின் தலையீடுகள் இருப்பது போன்ற தோற்றம் இருக்கிறது.

தேர்தல் ஆணையம் தன்னாட்சி அதிகாரம் பெற்ற அமைப்பு. அது அரசியல் தலையீடு இல்லாமல் சுதந்திரமாக செயல்பட வேண்டும் என எதிர்பார்க்கிறோம்.” – என்றார்.

# சமூக வலைதளங்களில் இணைந்தார் தே.மு.தி.க. பிரேமலதா விஜயகாந்த்

தே.மு.தி.க. பொதுச்செயலாளர் பிரேமலதா விஜயகாந்த் பெயரில் புதிதாக சமூக வலைதள பக்கங்கள் தொடங்கப்பட்டுள்ளன.

இதுதொடர்பாக பிரேமலதா.விடுத்துள்ள செய்திக்குறிப்பில்,

“தேசிய முற்போக்கு திராவிட கழகத்தின் நிர்வாகிகளுக்கும், தொண்டர்களுக்கும், தொலைக்காட்சி, இணையதள ஊடகங்களுக்கும் மற்றும் அனைத்து ஊடக நண்பர்களுக்கும்



வணக்கங்களை தெரிவித்துக் கொள்கிறேன். இன்று முதல் அதிகாரபூர்வமான பேஸ்புக், எக்ஸ் தளம், இன்ஸ்டாகிராம் மற்றும் வாட்ஸ் அப் போன்ற சமூக வலைதளங்களை தொடங்கி கட்சி ரீதியான அறிவிப்புகளும், மக்களுக்கான செய்திகளும், தனிப்பட்ட கருத்துக்கள் போன்ற முக்கிய செய்திகள் இந்த நான்கு சமூக ஊடகங்கள் வழியாக உங்களை வந்து அடையும் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.” என்று குறிப்பிட்டுள்ளார்.



# பணயக் கைதிகளை விடுவிக்க காலக்கெடு நிர்ணயித்தது இஸ்ரேல்

கடந்த ஒக்டோபர் மாதம் 07 ஆம் திகதி இஸ்ரேல் மீது தாக்குதல் நடத்தி பணயக்கைதிகளாக பிடித்துச் செல்லப்பட்டவர்களை ஹமாஸ் அமைப்பு விடுவிக்க இஸ்ரேல் கால்கெடுவை நிர்ணயித்துள்ளது.

இதன்படி 'மார்ச் 10 அல்லது 11 காலகட்டத்தில் இஸ்லாமியர்களின் ரம்ஜான் மாதம் தொடங்கும். ரம்ஜான் தொடங்கும் முன் ஹமாஸ் அமைப்பினர் பிணைக்கைதிகளை விடுவிக்காவிட்டால், பலஸ்தீன ரஃபா பகுதியில் தாக்குதலை மேலும் தீவிரப்படுத்துவோம்.

இவ்வாறு இஸ்ரேலி அமைச்சரவை அமைச்சர் பென்னி கான்ட்ஸ் கடும் தொனியில் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

"ரஃபா பகுதியில் உள்ள பொதுமக்களை அப்புறப்படுத்த அமெரிக்கா மற்றும் எகிப்து ஆகிய நாடுகளுடன் பேசவுள்ளோம். இது தீவிரமான நடவடிக்கைதான்.




ஹமாஸ் அமைப்பினருக்கு 2 வாய்ப்புகள் உள்ளன. அவர்கள் பிணைக்கைதிகளை விடுவித்து விட்டு சரணடையலாம். இதன் மூலம் காசா மக்களும் ரம்ஜான் கொண்டாட முடியும். இல்லையென்றால், தீவிர தாக்குதலை எதிர் கொள்ள வேண்டியிருக்கும்." என தெரிவித்துள்ளார்.

# காசா போரை உடன் நிறுத்துங்கள்: இளவரசர் வில்லியம் வலியுறுத்து

பொதுவாக அரச குடும்பத்தை சேர்ந்தவர்கள் அரசியல் நிகழ்வுகள் குறித்து கருத்து தெரிவிக்காமல் இருப்பது வழக்கமாக இருந்து வந்த நிலையில், காசா போரை உடனடியாக முடிவுக்குக் கொண்டுவர வேண்டும் என்று வேல்ஸ் இளவரசர் வில்லியம் வலியுறுத்தி உள்ளார்.

இது தொடர்பாக வெளியிடப்பட்ட அறிக்கையில்,

"கடந்த ஆண்டு ஒக்டோபர் 7-ம் திகதி ஹமாஸ் மத்திய கிழக்கில் நடத்திய தாக்குதல் மற்றும் அதன் பிறகு அங்கு நடைபெறும் சம்பவங்களால் மனித குலம் எதிர்கொள்ளும் இழப்புகளை கண்டு பெரிதும் வருந்துகிறேன்.

இதில் பலர் கொல்லப்பட்டு விட்டனர். நான், மற்றவர்களை போன்றே, இந்த






சண்டை உடனடியாக நிறுத்தப்பட வேண்டும் என்றே நினைக்கிறேன்.

காசாவிற்கு மனிதாபிமான உதவிகள் அதிகளவில் தேவைப்படுகிறது. உதவிகள் அதிவேகமாக சென்றடைய வேண்டியதும், பணயக்கைதிகள் விடுவிக்கப்பட வேண்டியதும் அவசியம் ஆகும்," என்று குறிப்பிட்டுள்ளார்.



# இஸ்ரேல் - காசா இடையே தற்காலிக போர் நிறுத்தம் ஐ.நா. பாதுகாப்பு கவுன்சிலில் அமெரிக்கா பிரேரணை

இஸ்ரேல் – காசா இடையே முடிவின்றி தொடரும் போரில் இதுவரை கடைப்பிடித்து வந்த நிலைப்பாட்டினை திடீரென மாற்றி, அந்தப் பகுதியில் தற்காலிக போர் நிறுத்தம் மேற்கொள்ள வேண்டும் என்பதை வலியுறுத்தும் பிரேரணையை ஐ.நா. பாதுகாப்பு கவுன்சிலில் அமெரிக்கா கொண்டு வரவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.



ஐந்து மாதங்களை கடந்து உக்கிரமடைந்துவரும் போரில் இதுவரை காசா தொடர்பாக கொண்டு வரப்படும் பிரேரணைகளில் “போர் நிறுத்தம்’ என்ற வார்த்தையை அமெரிக்கா தவிர்த்து வந்தது.

ஆனால், அமெரிக்க அதிபர் ஜோ பைடன், காசாவில் இஸ்ரேல் வரம்பு மீறி தாக்குதல் நடத்துவதாக குற்றம் சாட்டி அண்மைக்காலமாக அறிக்கைகளை வெளியிட்டு வருகிறார்.

அத்துடன், அங்கு இடம்பெறும் சண்டைகள் உடனடியாக நிறுத்தப்பட வேண்டும் எனவும் அவர் கூறி வருகிறார்.

இந்த நிலையில், பைடனின் கருத்தை பிரதிபலிக்கும் வகையில், காசாவில் தற்காலிக போர் நிறுத்தம் மேற்கொள்ளப்பட வேண்டும் என்பதை வலியுறுத்தும் பிரேரணையை அமெரிக்கா தயாரித்து வருவதாக தகவலறிந்த வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

காசாவில் தற்காலிக போர் நிறுத்தம் மேற்கொள்ளப்பட வேண்டும் எனவும், ராஃபா நகரில் தரை வழித் தாக்குதல் கூடாது எனவும் வலியுறுத்தும் ஐ.நா. பாதுகாப்பு கவுன்சிலின் பிரேரணையையே அமெரிக்கா தயார் செய்துவருகிறது.

காசாவில் போர் நிறுத்தம் மேற்கொள்ளப்படுவதற்கான வரைவுத் பிரேரணையை அமெரிக்கா தயாரித்து வந்தாலும், அந்தப் பகுதியில் மனிதாபிமானப் பணிகளை மேற்கொள்ள உதவியாக அங்கு போர் உடனடியாக நிறுத்தப்பட வேண்டும் என்று வலியுறுத்தி அல்ஜீரியா கொண்டு வந்த தீர்மானத்தை அமெரிக்கா தனது ‘வீட்டோ’ அதிகாரத்தைப் பயன்படுத்தி ரத்து செய்தது. காசாவில் போர் நிறுத்தம் மேற்கொள்வதற்காக இதுவரை கொண்டு வரப்பட்ட 3 பிரேரணைகளை அமெரிக்கா தனது ‘வீட்டோ’ அதிகாரத்தைப் பயன்படுத்தி ரத்து செய்துள்ளமை குறிப்பிடத்தக்கது.





# வங்க தேசத்தின் மொழிப் போரும் ஈழத்தில் தனிச் சிங்களச் சட்டமும்!

■ ஐங்கரன் விக்கினேஸ்வரா

**இன்று பெப்ரவரி 21 ஆம் திகதி உலக தாய் மொழிகள் தினம்**

தாய் மொழிக்காகப் போராடி உயிரிழந்தவர்களை நினைவுகூறி, உலகில் அனைத்து மக்களின் தாய் மொழி உரிமையைப் பாதுகாக்கும் வகையில், பெப்ரவரி 21 ஆம் திகதியைச் சர்வதேச தாய்மொழி தினமாக ( International Mother Language ) ஐ.நாவின் யுனெஸ்கோ 1999 ஆம் ஆண்டு பிரகடனப்படுத்தியது.

இதையடுத்து 2000 ஆம் ஆண்டிலிருந்து, பெப்ரவரி 21 ஆம் திகதி உலக தாய் மொழிகள் தினமாகக் கொண்டாடப்படுகிறது.

தாய்மொழியின் அவசியத்தை உணர்த்தும் வண்ணம் வங்க தேசத்தின் மொழிப் போர் அமைகிறது. இதற்கான மூல காரணம் சரியாக எழுபது ஆண்டுகளுக்கு முன்னால் இன்றைய வங்கதேசத்தில் எழுந்த மொழிப் போரே இன்றைய சுதந்திர பங்களாதேஷின் விடுதலையின் அடிப்படைக் காரணமாகிறது.

### 1956 தனிச் சிங்களம் சட்டம்

ஈழத்திலும் நீண்ட காலமாக நடக்கும் இனப் போராட்டத்தின் மூல காரணியும் மொழியே ஆகும். தனிச் சிங்களம் மட்டும் சட்டம் (Sinhala Only Act) அதிகார பூர்வமாக 1956 ஆம் ஆண்டில் எஸ். டபிள்யூ. ஆர். டி. பண்டாரநாயக்க தலைமையிலான இலங்கை அரசால் 1956 ஆம் ஆண்டு யூன் 5 ஆம் திகதி இலங்கை நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டது. சிங்களம் மட்டுமே இலங்கையின் அரச கரும மொழியாக (Official Language Act) அறிவிக்கப்பட்ட பின்னரே தமிழ் மக்கள் கொடுமையாக அரசால் ஒடுக்கப்பட்டனர்.

தனிச் சிங்கள சட்டம் நிறைவேற்றப்பட்டதன் மூலம் இலங்கையின் ஆட்சிமொழியான ஆங்கில மொழி அகற்றப்பட்டு 70 வீத பெரும்பான்மை சிங்களவர்கள் பேசும் சிங்கள மொழி மட்டுமே ஆட்சி மொழியாக்கப் பட்டது. நீண்ட காலமாகப் பிரித்தானியரின் ஆட்சியின் கீழ் ஆங்கிலம் ஆட்சி மொழியாக இருந்தது. அரசுப் பதவிகளுக்கு ஆங்கிலம் கட்டாயம் தெரிந்திருக்க வேண்டிய அவசியம் இருந்தது.





ஆயினும் 1936 ஆம் ஆண்டில் இலங்கை அரச சபைத் தேர்தலில் வெற்றி பெற்ற இடதுசாரிகளான என். எம். பெரேரா, பிலிப் குணவர்தனா போன்றவர்கள் ஆங்கிலத்துக்குப் பதிலாகச் சிங்களம், மற்றும் தமிழ் ஆகியவற்றை ஆட்சி மொழிகளாக்க வேண்டும் என்று வலியுறுத்தினர். நவம்பர் 1936 இல், 'இலங்கைத் தீவு முழுவதும் உள்ளாட்சிகள் மற்றும் பொலிஸ், நீதிமன்றங்களில் உள்ளூர் மொழிகளிலேயே வழக்குகள் நடத்தப்பட வேண்டும்' மற்றும் 'பொலிஸ் நிலையங்களில் சாட்சிகளின் மொழிகளிலேயே வழக்குகள் பதியப்பட வேண்டும்' போன்ற சட்ட மூலங்கள் அரச சபையில் கொண்டுவரப்பட்டு சட்டச் செயலாளருக்கு மேலதிக ஆணைக்காக அனுப்பப்பட்டன.

### 1944 இல் ஜே. ஆரின் இனவாதம்

ஆனால் 1944 ஆம் ஆண்டில் ஜே. ஆர். ஜெயவர்தனா ஆங்கிலத்துக்குப் பதிலாகச் சிங்களத்தை மட்டுமே அதிகாரபூர்வ மொழியாக்க வேண்டும் என்று அரச சபையில் கோரினார். இதனூடகவே இனவாதம் இலங்கையில் வேரூன்றியது. ஆனாலும் ஆங்கிலம் தொடர்ந்து 1956 வரை ஆட்சி மொழியாக இருந்து வந்தது.

1956 இல் சிங்கள மொழி அரச கரும மொழியானது மட்டுமன்றி இந்த சட்ட மூலமே தீவெங்கும் வாழ்ந்து வந்த சிங்கள – தமிழ் இனங்களிடையே முரண்பாடுகளை உருவாக்கக் காரணமாயிற்று.

இதன் பின் தமிழர்கள் செறிந்து வாழ்ந்துவரும் வடக்கு, கிழக்கு பகுதிகளில் போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டதுடன் அங்குள்ள அரச நிறுவனங்களில் பணிகள் முடக்கப்பட்டன.

### தந்தை செல்வா தலைமையில் போராட்டங்கள்

தனிச் சிங்கள சட்டமூலத்தின் காரணமாக அரச பணியில் உள்ள தமிழர்களும் சிங்களம் படிக்க வேண்டிய கட்டாயத்துக்கு உள்ளாக்கப்பட்டார்கள். இந்தச் சட்டத்தைத் தமிழ், மற்றும் சிங்கள இடதுசாரி

தொடர்ச்சி ▼



# வங்க தேசத்தின் மொழிப் போரும் ஈழத்தில் தனிச் சிங்களச் சட்டமும்!

தொடர்ச்சி ▲

உறுப்பினர்கள் எதிர்த்தனர்.

ஆயினும் தமிழர் தரப்பில் எஸ். ஜே. வி. செல்வநாயகம் தலைமையில் பல போராட்டங்கள், முன்னெடுப்புகள் மேற்கொள்ளப்பட்டன. யாழ்ப்பாணம், வவுனியா, மட்டக்களப்பு, திருகோணமலை போன்ற தமிழர் பகுதிகளில் அரசின் செயற்பாடுகள் இயங்க விடாது செய்யப்பட்டன.

இந்தப் போராட்டங்களை அடுத்தே பண்டாரநாயக்கா 1958 ஆம் ஆண்டு 28 ஆம் இலக்க திருத்தச் சட்டமொன்றைக் கொண்டு வந்ததுடன் தமிழ் மொழிக்குச் சில விட்டுக்கொடுப்புகளை வேண்டா வெறுப்பாக ஏற்படுத்தினார். ஆயினும் இந்தத் திருத்தங்கள் வெறும் கண்துடைப்பாகவே இருந்தன.

அன்று தொடங்கிய ஈழத் தமிழரின் போராட்டம் இன்னமும் ஓயவில்லை. எத்தனையோ இனப்படு கொலைகள் தமிழர் தாயகம் மீது நிகழ்த்தப்பட்டும், சர்வதேசம் இன்னமும் கண்ணை மூடிக் கொண்டே உள்ளது.

**அங்கீகரிக்கப்படாத தமிழர் இறையாண்மை**

உலக தாய்மொழி தின பிரகடனத்தின் மூல காரணியே வங்க தேசத்தின் மொழிப் போர் ஆகும். மொழிப்போரால் வெற்றி அடைந்த வங்க தேசத்தின் வரலாற்றை உலகம் அறிந்தாலும், ஈழத்தில் தனிச்சிங்கள சட்டம் மூலம் அழிந்த தமிழரின் இறை யாண்மையை சர்வதேசம் அங்கீகரிக்காமல் இருப்பது கவலைக்குரியதே. ஆயினும் காலங் கடந்தாவது தமிழ் தேச இறையாண்மையை உலகம் ஏற்குமென நம்புவோம்.

மொழிப் போரில் வென்ற இன்றைய பங்களாதே ஷில், (அன்றைய கிழக்குப் பாகிஸ்தான்) "எங்களுக்கு வங்க மொழியே ஆட்சி மொழி பாகிஸ்தான் திணிக்கும் உருது மொழியை ஆட்சி மொழியாக ஏற்க முடியாது" என்று அறிவித்து, 1952ஆம் ஆண்டில் வங்காளிகள் நடத்திய உருதுமொழி எதிர்ப்புப் போராட்டத்தில் உயிர்நீத்த நான்கு மாணவர்களின் தியாகத்தைப் போற்றும் வகையில், அவர்கள் கொல்லப்பட்ட நாளான பெப்ரவரி 21 ஆம் நாள் உலகத் தாய்மொழி நாளாக அறிவிக்கப்பட்டது.

அன்றைய கிழக்கு பாகிஸ்தானில், உருது மட்டுமே தேசிய மொழியாக இருந்தது. ஒரே மதத்தினராக இருந்தாலும், மேற்கு பாகிஸ்தானில் அதிகம் பேசப்படும் உருது மொழியானது, கிழக்கு பாகிஸ்தானில் திணிக் கப்படுவதை, வங்காள மக்கள் ஏற்கவில்லை.

**மொழிப் போர் தியாகிகள் தினம்**

இந்தப் பின்னணியில் 1948 பெப்ரவரி 23 அன்று கூடிய பாகிஸ்தான் அரசியல் நிர்ணய சபை, தனது உறுப்பினர்கள் உருது அல்லது ஆங்கிலத்தில் மட்டுமே பேசலாம் என முடிவெடுத்தது. இதை எதிர்த்த கிழக்குப் பாகிஸ்தானைச் சேர்ந்த உறுப்பினர் திரேந்திரநாத் தத்தா 'வங்க மொழியையும் அதில் சேர்க்க வேண்டும்' என்று முன்மொழிந்தார். எனினும், அன்றைய



பாகிஸ்தான் பிரதமர் லியாகத் அலிகான், கிழக்குப் பாகிஸ்தான் முதல்வர் க்வாஜா நசிமுதீன் உள்ளிட்ட பலரின் உதவியுடன் வங்க மொழிக்கு ஆதரவான தீர்மானம் தோற்கடிக்கப்பட்டது. இதற்கு எதிராகக் கிழக்கு பாகிஸ்தான் போர்க்கோலம் பூண்டது.

1948 மார்ச் 11 இல் பொது வேலை நிறுத்தம்

தொடர்ச்சி ▼

# வங்க தேசத்தின் மொழிப் போரும் ஈழத்தில் தனிச் சிங்களச் சட்டமும்!

**தொடர்ச்சி ▲**

நடைபெற்றது. மார்ச் 19 இல் பாகிஸ்தான் ஜனாதிபதி முகமது அலி ஜின்னா அரசு முறைப் பயணமாக டாக்கா வந்து கலந்துகொண்ட இரண்டு நிகழ்ச்சி களிலுமே, மக்களின் கடுமையான எதிர்ப்புக் குரல்க ளுக்கு இடையே, 'பாகிஸ்தானின் அரசு மொழியாக உருது மட்டுமே இருக்கும்' எனத் திட்டவட்டமாகத் தெரிவித்தார்.

இதைத் தொடர்ந்து, அரசியல் மட்டத்தில் தொடங்கிய எதிர்ப்பு மாணவர்கள், இளைஞர்கள், புத்திஜீவிகள் மத்தியிலும் வேகமாகப் பரவியது. இவ்வாறு தாய் மொழியான வங்க மொழிக்கு ஆதரவாக 1948 இல் தொடங்கிய இந்த இயக்கம் தொடர்ந்து வலுப்பெற்று 1952 இல் உச்சம் எய்தியது.

**டாக்கா மாணவர்களின் கிளர்ச்சி**

1952 பெப்ரவரி 21 அன்று டாக்கா மருத்துவக் கல்லூரி மாணவர்களின் கிளர்ச்சியை ஒடுக்க ராணுவம் நடத்திய தாக்குதலில் ரஃபீக் உதீன் அகமது, அப்துல் ஜப்பார், அப்துல் பரக்கத், அப்துல் சலாம் ஆகிய மருத்துவக் கல்லூரி மாணவர்களோடு, ஒன்பது வயதேயான ரஹியுல்லா என்ற சிறுவன் உட்பட ஐந்து பேர் கொல்லப்பட்டனர். நூற்றுக்கணக்கானோர் காயமுற்றனர்.

இவர்கள் உயிர்நீத்த அதே இடத்தில் பெப்ரவரி 23 அன்று தியாகிகள் நினைவுச் சின்னம் தற்காலிகமாக உருவானது. அன்றிலிருந்து ஒவ்வோர் ஆண்டும் அரசின் கடுமையான ஒடுக்கு முறைக்கு இடையே பெப்ரவரி 21 ஆம் திகதியை மொழிப் போர் தியாகிகளின் தினமாக கிழக்கு பாகிஸ்தான் மக்கள் கடைப்பிடித்து வந்தனர்.

மக்களின் கடுமையான எதிர்ப்பை அடுத்து 1956 பெப்ரவரி 16 அன்று பாகிஸ்தானின் அரசு மொழிகளில் ஒன்றாக வங்க மொழி ஏற்றுக்கொள்ளப்பட்டது. எனினும், மேற்கு பாகிஸ்தானின் ஆதிக்க உணர்வு மங்கி விடவில்லை. பொருளாதார ரீதியாகவும், சமூக ரீதியாகவும் கிழக்கு பாகிஸ்தான் மக்களை ஒடுக்கவும், மத ரீதியாக அவர்களைப் பிளவுபடுத்தவுமான அனைத்து முயற்சிகளும் மேற்கொள்ளப்பட்டன.

கிழக்கு பாகிஸ்தான் மீதான, தொடர்ச்சியான புறக்கணிப்பை எதிர்த்துக் குரல் கொடுத்துவந்த அவாமி லீக் தலைவர் ஷேக் முஜிபுர் ரஹ்மான், அகர்தலா சதிவழக்கில் கைது செய்யப்பட்டு மேற்கு பாகிஸ்தானில் சிறை வைக்கப்பட்டார்.

1970 டிசெம்பரில் நடைபெற்ற தேர்தலில் கிழக்கு பாகிஸ்தான் பகுதியின் மொத்தமுள்ள 169 இடங்களில் 167 இடங்களை அவாமி லீக் கட்சி கைப்பற்றி, ஆட்சியைப் பிடிக்கத் தகுதி பெற்றிருந்த நிலையில், “நாங்கள் ஆட்சியமைக்க வழிவிட வேண்டும் புதிய அரசமைப்புச் சட்டத்தை உருவாக்க வேண்டும்” என்ற முஜிபுர் ரஹ்மானின் கோரிக்கையை பாகிஸ்தான் ராணுவம், பாகிஸ்தான் மக்கள் கட்சி தலைமை பூட்டோ அரசு கடுமையாக எதிர்த்தது.

**மொழிப் போரால் பிறந்த நாடு**

இவ்வாறு தாய்மொழிக்காகத் தொடங்கிய போராட்டம் படிப்படியாக அரசியல் ரீதியாக வலுப்பெற்று, விடுதலைப் போராக உருமாறியது. இப்போரின்போது கிழக்கு பாகிஸ்தான் மக்களை அடக்கி ஒடுக்க பாகிஸ்தான் ராணுவப் படைகள் கட்டவிழ்த்துவிட்ட வன்முறை வெறி யாட்டத்தில் முப்பது லட்சம் பேர் படுகொலை செய்யப் பட்டனர். மூன்று லட்சம் பெண்கள் மிகக் கொடூரமான வகையில் பாலியல் வன்கொடுமைக்கு ஆளாயினர். கிழக்கு பாகிஸ்தானில் காலம் காலமாக இருந்து வந்த கட்டமைப்பு வசதிகள் முற்றிலுமாகத் துடைத்தெறி யப்பட்டன.

ஒருவகையில், இதை இன ஒழிப்பு நடவடிக்கை என்றே கூறிவிடலாம். வங்கதேசம் உருவாகி 50 ஆண்டுகள் ஆன பிறகும் கூட இந்த இன ஒழிப்பு நடவடிக்கைக்குப் பாகிஸ்தான் இன்றுவரை வருத்தம் தெரிவிக்கவில்லை. இனப் படுகொலை குற்றவாளிகள் என்று அடையாளம் காணப்பட்ட 195 போர்க் குற்ற வாளிகள் மீது எவ்வித நடவடிக்கையும் எடுக்கப் படவில்லை.

இறுதியில், உலகிலேயே முதன்முறையாக ஒரு மொழியின் அடிப்படையில் வங்கதேசம் என்ற தனியொரு நாடு உருவாக வழிவகுத்தது.

இந்தப் பின்னணியில்தான் தாய்மொழியின் முக்கியத்துவத்தை உணர்த்தும் வகையில் சர்வதேசக் கலாச்சார அமைப்பான யுனெஸ்கோ, வங்கதேசத்தின் மொழிப் போர் தொடங்கிய பெப்ரவரி 21 ஆம் திகதியை உலக தாய்மொழி நாளாக ஆண்டு தோறும் கொண்டாட வேண்டும் என்று 1999 நவம்பர் 17 இல் தீர்மானம் நிறைவேற்றியது.

பின்பு, ஐக்கிய நாடுகள் சபையும் தனது உறுப்பு நாடுகள் இதைக் கொண்டாட வேண்டுமென பொது அவையில் தீர்மானம் நிறைவேற்றியது.

ஒவ்வொரு தாய்மொழி நாளும் பெப்ரவரி 21 அன்று கொண்டாடப்படும் வேளையில், உலகத்துக்குச் சொல்லும் பாடம் ஒன்று தான்.

தேசிய இனங்களுக்கான உரிமைகளை, அவர்களது மொழி, பண்பாடு ஆகியவற்றை, ஒற்றை ஆதிக்கத்தின்கீழ் கொண்டுவரத் துடிக்கும் எந்தவொரு அரசும் இறுதியில் சிதறுண்டு போனதையே உலக வரலாறு நிரூபித்துள்ளது.



கனடா முரசு

பக்கங்கள் - 5

புதன்கிழமை 21/02/2024


## பிரம்டனில் கத்துக்குத்து ஒருவருக்குப் படுகாயம்!

**ஒன்ராரியோ,பெப்.21**

பிரம்டன் நகரில் நேற்று செவ்வாய்க்கிழமை (பெப்ரவரி 20) இடம்பெற்ற கத்திக்குத்துச் சம்பவத்தில் காயமடைந்த நபர் உயிருக்கு C2




# கனடாவின் பணவீக்கம் 2.9 சதவீதமாக வீழ்ச்சி

**ஒன்ராரியோ, பெப். 21**

**கனடாவின் வருடாந்தப் பணவீக்க விகிதம் கடந்த ஜனவரி மாதம் 2.9 சதவீதமாக வீழ்ச்சியடைந்துள்ளது.**

**எதிர்பார்த்ததை விட விலை அதிகரிப்பில் கூர்மையான சரிவை இது குறிப்பதாக பொருளியலாளர்கள் தெரிவிக்கின்றனர்.**

செவ்வாய்க்கிழமை வெளிவந்த புள்ளிவிவரங்கள் கனடாவின் நுகர்வோர் விலைக் குறியீட்டு அறிக்கையில், ஆண்டுக்கு, ஆண்டு அடிப்படையில் வீழ்ச்சி கண்ட எரிபொருளின் விலை இந்த பணவீக்க வீழ்ச்சிக்கு துணை புரிந்துள்ளதாக தெரிவிக்கின்றது.

டிசம்பரில் வருடாந்த பணவீக்கம் விகிதம் 3.4 சதவீதமாக இருந்தது.

நுகர்வோர் விலைக் குறியீட்டின் எட்டு கூறுகளில் ஐந்தில் விலை அதிகரிப்பு குறைந்துள்ளதால், நுகர்வோர் விரைவில் நல்ல செய்திகளை எதிர்பார்க்கலாம் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

டிசம்பரில் 4.7 சதவீதமாக இருந்த மளிகைப் பொருள்களின் விலை வருடாந்த அடிப்படையில், ஜனவரியில் 3.4 சதவீதம் அதிகரித்துள்ளது.

# கொவிட் காலத்தில் 'அரைவ்கென்' செயலின் அறிமுகத்தில் விதிமுறைகள் மீறப்பட்டனவாம்

## அப்பட்டமாகத் தெரிகின்றது என்கிறார் பிரதமர் ட்ரூடோ

அரைவ்கென் (ArriveCan) செயலி

ஒன்ராரியோ – சர்ச்சைக்குரிய அரைவ்கென் (ArriveCan) செயலியின் அபிவிருத்தியின் போது ஒப்பந்த விதிகள் மீறப்பட்டமை வெளிப்படையாகத் தெரிவதாக பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ தெரிவித்துள்ளார்.

கொவிட்-19 பெருந்தொற்றின் ஆரம்ப காலப்பகுதியில் இந்த செயலி அபிவிருத்தி செய்யப்பட்ட போதிலும், எந்தவொரு நெருக்கடி மிக்க தருணமாக இருந்தாலும், அவசியமான விதிகளைப் பின்பற்ற வேண்டியது கட்டாயம் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இது தொடர்பான விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன எனவும், இந்த முறைகேட்டில் சம்பந்தப்பட்டவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்படும் எனவும் பிரதமர் ட்ரூடோ தெரிவித்துள்ளார்.

பெருந்தொற்று காலப்பகுதியில் சுகாதாரத் தகவல்களைப் பெற்றுக் கொள்வதற்கும், சுங்கச் செயற்பாடுகள் மற்றும் குடிவரவு செயற்பாடுகளை டிஜிட்டல்மயமாக்கும் நோக்குடனும் 2020ஆம் ஆண்டு ஏப்ரல் மாதத்தில் இந்த அரைவ்கென் செயலி அறிமுகப்படுத்தப்பட்டது.

இந்தச் செயலியின் அபிவிருத்தி மற்றும் நடைமுறைப்படுத்தலில் அடிப்படை விதிகள் முழுமையாக மீறப்பட்டிருக்கின்றன என இம்மாத ஆரம்பத்தில் வெளியான கனேடிய கணக்காளர் நாயகத்தின் அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.





# தாதியர், ஆசிரியரின் சம்பளத்துக்குக் கட்டுப்பாடு மன்னிப்புக் கோர ஒன்ராரியோ முதல்வர் மறுப்பு

**ஒன்ராரியோ, பெப். 21**

பில் 124இன் ஊடாக மருத்துவ தாதியர்கள் மற்றும் ஆசிரியர்களின் சம்பளத்தைக் கட்டுப்படுத்தியமை தொடர்பில் மன்னிப்புக் கேட்க வேண்டும் என ஒன்ராரியோ புதிய ஜனநாயகக் கட்சி, ஒன்ராரியோ முதல்வர் டக் போர்ட்டிடம் கோரியுள்ளது.

எனினும், இந்த கோரிக்கையை முதல்வர் போர்ட் மறுத்துள்ளார்.

நீதிமன்ற மேன்முறையீடு தோல்வி கண்டமையைத் தொடர்ந்து, சம்பள–இடைவெளி சட்டத்தை திருத்துவதற்கு ஒரு வாரத்திற்கு முன்னர் மாநில அரசாங்கம் தீர்மானம் எடுத்திருந்தது.

இந்த விடயம் தொடர்பில் மாநிலங் களவையில் செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற கேள்வி–பதில் நேரத்தின் போது புதிய ஜனநாயகக் கட்சியினர் மாநில முதல்வரிடம் கோரினர்.

இந்த கேள்வி நேரத்தின் போது பதிலளிப்பதற்கு இரு முறை எழுந்திருந்த போதிலும், முதல்வர் டக் போர்ட் இந்த கேள்விக்குப் பதிலளிக்க வில்லை எனத் தெரிவிக்கப்படுகின்றது.

ஒன்ராரியோ மாநிலங்களவையின் எதிர்க்கட்சித் தலைவர் உண்மையில் மக்கள் குறித்து அக்கறை கொண்டவராக இல்லை எனவும், மாநில செலவீனத்தை குறைப்பதிலேயே அரசாங்கம் கவனம் செலுத்தி வருவதாகவும் முதல்வர் போர்ட் தெரிவித்துள்ளார்.




**பிரம்டனில் கத்திக்குத்து...**

**(C1 ஆம் பகத்த் தொடர்ச்சி)**

ஆபத்தான நிலையில் வைத்திய சாலையில் சிகிச்சைக்குச் சேர்க்கப் பட்டுள்ளார்.

பிரம்டன் டவுன்டவுன் பகுதியில் இடம்பெற்ற இந்த சம்பவம் குறித்து தகவலறிந்த பீல் பிராந்திய பொலிஸார் செவ்வாய்க்கிழமை பிற்பகல் 1.30 அளவில், சம்பவ இடத்திற்கு விரைந்து கத்திக்குத்து காயங்களுடன் இருந்த ஆணொருவரை மீட்டு வைத்தியசாலையில் சேர்த்துள்ளனர்.

பாதிக்கப்பட்டவரின் காயங்கள் உயிருக்கு ஆபத்தானவை என்று பொலிஸார் தெரிவித்தனர்.

எனினும், சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேகநபர் இதுவரை அடையாளங் காணப்படவில்லை என பொலிஸார் தெரிவிக்கின்றனர்.



# தட்டம்மை பரவல் தொடர்பில் ஒன்ராரியோவில் எச்சரிக்கை!

**ஒன்ராரியோ,பெப்.21**

தட்டம்மை நோய்ப் பரவல் தொடர்பில் அவதானமாக இருக்குமாறு ஒன்ராரியோவின் மூத்த வைத்தியர் ஒருவர் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

டொரன்டோ பகுதியில் அண்மையில் இரண்டு தட்டம்மை நோயாளிகள் அடையாளம் காணப்பட்டிருந்தனர்.

உலகளவில் தற்போது தட்டம்மை நோயாளர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருவதால் சுகாதார நிறுவனங்களும், பொது மக்களும் அவதானத்துடன் இருக்க வேண்டும் என ஊடகங்களுக்கு அனுப்பி வைத்துள்ள குறிப்பில் சிரேஷ்ட வைத்தியரான கீரன் மூர் குறிப்பிட்டுள்ளார்.

தட்டம்மை என்பது காற்று மற்றும் நெருங்கிய தொடர்பு மூலம் பரவக் கூடிய மிகவும் தொற்றக்கூடிய வைரஸ் தொற்று ஆகும். நோய் அறிகுறிகளில் சொறி, காய்ச்சல், இருமல் மற்றும் சோர்வு ஆகியவை அடங்கும்.





# டொரன்டோவில் சுட்டுக் கொல்லப்பட்ட இருவரில் ஒருவர் கானாவைச் சேர்ந்தவர்

**ஒன்ராரியோ, பெப். 21**

கடந்த வார இறுதியில் டொரன்டோவின் வடமேல் பகுதியில் இடம்பெற்ற துப்பாக்கிப் பிரயோகங்களில் உயிரிழந்த இருவரில் ஒருவர் கானாவைச் சேர்ந்த 4 பிள்ளைகளின் தந்தை என தெரிய வந்துள்ளது.

வெள்ளிக்கிழமை மற்றும் சனிக்கிழமை ஆகிய தினங்களில் பஸ்ஸிற்காக காத்திருந்த இருவர் சுட்டுக் கொல்லப்பட்டிருந்தனர்.

துப்பாக்கிப் பிரயோகத்தை மேற்கொண்ட சந்தேக நபர்களுக்கும், கொல்லப்பட்டவர்களுக்கும் இடையில் எவ்வித தொடர்பும் இல்லை என்பது விசாரணைகளின் போது தெரியவந்துள்ளதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

இரு சம்பவங்களின் போதும் பஸ்ஸிற்காக காத்திருந்தவர்கள் அடையாளம் தெரியாத நபர்களால் துப்பாக்கிப் பிரயோகத்திற்கு இலக்காகியுள்ளனர்.

சந்தேக நபர் அல்லது நபர்களால் திருடப்பட்டு இரு சம்பவங்களின் போதும் பயன்படுத்தப்பட்ட வாகனங்கள் கைவிடப்பட்ட நிலையில் பொலிஸாரால் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.




# கொவிட் அன்டிஜென் பரிசோதனைத் தொகுதிகள் காலாவதியாவதால் புதியவற்றைப் பெற நடவடிக்கை

## அல்பேர்ட்டா சுகாதார அமைச்சு முயற்சி

**அல்பேர்ட்டா,பெப்.21**

அல்பேர்ட்டாவின் கொவிட்-19 பரிசோதனைத் தொகுதிகள் காலாவதியாகவுள்ள நிலையில், மேலும் புதிய தொகுதிகளைக் கொண்டு வருவது தொடர்பில் மாநில அரசு கவனம் செலுத்தியுள்ளது.

அல்பேர்ட்டா சுகாதார அமைச்சின் தகவல்களுக்கு அமைய, தலா ஐந்து பரிசோதனைப் பட்டிகளைக் கொண்ட, ஐந்து மில்லியன் துரித அன்டிஜென் பரிசோதனைத் தொகுதிகள் எதிர்வரும் மார்ச் மாதம் காலவதியாகவுள்ளதால், அவை பயன்பாட்டுக்கு உகந்ததல்லனவாக அகற்றப்படும் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

கடந்த ஜனவரி மாதம் காலாவதியான பெருந்தொகையான பரிசோதனைத் தொகுதிகள் ஏற்கனவே அகற்றப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

செப்டம்பர் மற்றும் டிசம்பர் 2024இல் காலாவதியாகக் கூடிய மேலதிக பரிசோதனைத் தொகுதிகளை பெறுவது தொடர்பில் மத்திய அரசாங்கத்துடன் இணைந்து செயற்பட்டு வருவதாக அல்பேர்ட்டா சுகாதார அமைச்சு தெரிவிக்கின்றது.

# மில்டன் தொகுதி இடைத்தேர்தலில் லிபரல்களின் ஒன்ராரியோ தலைவர்



**ஒன்ராரியோ, பெப். 21**

மில்டன் பகுதிக்கான மாநில உறுப்பினருக்கு வெற்றிடம் ஏற்பட்டவுடன் நடைபெறவுள்ள இடைத்தேர்தலில் போட்டியிடத் திட்டமிட்டு வருகிறார் என லிபரல் கட்சியின் ஒன்ராரியோ மாநிலத் தலைவரான பொனி குரொம்பி தெரிவித்துள்ளார்.

மத்தியத் தேர்தலில் போட்டியிடுவதற்குத் தயாராகும் நோக்குடன் தமது மில்டன் ஆசனத்தில் இருந்து விலகவுள்ளார் கன்சர்வேட்டிவ் கட்சியின் மாநிலங்களவை உறுப்பினரான பம் கில், கடந்த மாதம் (ஜனவரி) தெரிவித்திருந்தார்.

அவர் பதவி விலகும் சந்தர்ப்பத்தில் நடைபெறப் போகும் இடைத்தேர்தலில் போட்டியிடுவதற்கு, ஒன்ராரியோ மாநில லிபரல் கட்சியின் தலைவராக 2022ஆம் ஆண்டில் இடம்பெற்ற தேர்தல்களின் பின்னர் தெரிவு செய்யப்பட்ட குரொம்பி தயாராகி வருகின்றார்.

வேறெந்த தொகுதியிலும் அல்லாமல், மில்டன் தொகுதியிலேயே தாம் போட்டியிட எதிர்பார்த்துள்ளார் எனவும், மில்டன் பகுதி மக்களின் தேவைகள் குறித்து தமக்கு நன்கு தெரியும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

# முதல்வரின் வெளிநாட்டுப் பயணங்கள் சசகெச்சுவான் எதிர்க்கட்சி விமர்சனம்



**சசகெச்சுவான், பெப். 21**

சசகெச்சுவான் மாநிலங்களவை முதல்வரின் வெளிநாட்டுப் பயணங்களை அம்மாநிலத்தின் எதிர்க்கட்சியான புதிய ஜனநாயகக் கட்சி விமர்சித்துள்ளது.

2018ஆம் ஆண்டு பதவியேற்றது முதல் மூன்றாவது முறையாக சசகெச்சுவான் முதல்வர் ஸ்கொட் மோவ் இந்தியாவுக்கான பயணத்தை மேற்கொண்டுள்ளார்.

முதல்வர் பிரச்சினைகளை விட்டு விலகிச் செல்கிறார் எனவும், அவரது பயணங்களிற்காக பொதுமக்களின் வரிப்பணம் விரயமாவதாகவும் எதிரக்கட்சி குற்றம் சுமத்தியுள்ளது.

வர்த்தக உறவுகளை வலுப்படுத்தும் நோக்குடனேயே முதல்வர் மோவின் இந்தியப் பயணம் உள்ளதாக செவ்வாய்க்கிழமை வெளியான செய்தியறிக்கை தெரிவிக்கின்றது.



# புகலிடம் கோருபவர்களால் கியூபெக்குக்கு சுமையாம்!

**கியூபெக்,பெப்.21**

புகலிடம் கோருபவர்களால் தமது சேவைக்கு ஏற்பட்டுள்ள சுமையை குறைக்குமாறு கோரி மத்திய அரசாங்கத்தின் மீது கியூபெக் அரசாங்கம் அழுத்தம் கொடுத்து வருகின்றது.

புகலிடக் கோரிக்கையாளர்களை கியூபெக்கிற்கு கொண்டு வரும் அரசாங்கத்தின் திட்டத்தை உடனடியாக நிறுத்த வேண்டும் என கியூபெக் அரசாங்கத்தைச் சேர்ந்த மூன்று அமைச்சர்கள் செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கோரிக்கை விடுத்தனர்.

புகலிடக் கோரிக்கையாளர்களில் 55 சதவீதமானவர்கள் கியூபெக்கிற்கு வருவதாக அவர்கள் சுட்டிக் காட்டினர்.

அதிகரித்து வரும் புகலிடக் கோரிக்கையாளர்கள் தொடர்பான பொது மக்கள் முறைப்பாடுகளின் தொடர்ச்சியாக கியூபெக் அரசாங்கத்தின் இந்த ஊடகவியலாளர் சந்திப்பு இடம்பெற்றது.

புகலிடக் கோரிக்கையாளர்களின் விடயங்களைக் கையாள்வதற்கு மத்திய அரசாங்கத்தினால் வழங்கப்படும் 150 மில்லியன் டொலர்கள் போதியதல்ல எனவும் அவர்களும் தெரிவித்துள்ளனர்.

# கார்பன் விலையிடல் வருமான விடயத்தில் சிறு வணிகங்களுக்கு நிவாரணம் குறைப்பு

## மத்திய அரசாங்கம் நடவடிக்கை

**ஒன்ராரியோ,பெப்.21**

கார்பன் விலையிடல் வருமானத்தில் சிறு வணிகங்கள் பெறுகின்ற நிதி நிவாரணத்தின் அளவை மத்திய அரசாங்கம் குறைத்து வருகிறது. இது கிராமப்புற குடும்பங்களுக்கு வழங்கும் தள்ளுபடியின் அளவை அதிகரிக்க உதவும் எனத் தெரிவிக்கப்படுகின்றது.



திட்டத்தின் முதல் ஐந்து ஆண்டுகளில் வாக்குறுதியளிக்கப்பட்ட கார்பன் விலை வருமானத்தில் வணிகங்களுக்கு அரசாங்கம் 2.5 பில்லியன் டொலருக்கும் அதிகமான தொகையை செலுத்த வேண்டியிருக்கின்றது.

சிறு வணிகங்கள் ஏற்கனவே திரும்பப் பெறுவதை விட அதிகமாக செலுத்துகின்றன. மேலும் இந்த மாற்றம் அந்த பற்றாக்குறையை இன்னும் மோசமாக்கும் என்று கனேடிய சுதந்திர வர்த்தகக் கூட்டமைப்பின் தலைவர் டேன் கெல்லி தெரிவித்துள்ளார்.

வர்த்தகர்கள் எதிர்நோக்கியிருக்கும் அதிகரித்த வரியின் மத்தியில், இது மற்றுமொரு சுமை எனவும், சிறு வர்த்தகர்கள் இந்தப் புதிய திருத்தத்திற்கு கடும் எதிர்ப்பை வெளியிடுவார்கள் என தாம் எதிர்பார்ப்பதாகவும் அவர் கூறியுள்ளார்.